بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11

இதழ் 22

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - துல் ஹஜ் 10

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - ஹிஜ்ரத் 28 ★ 28 மே 2026


## அல்லாஹ்வின் கட்டளை

لَنۡ یَّنَالَ اللّٰہَ لُحُوۡمُہَا وَلَا دِمَآؤُہَا وَلٰکِنۡ یَّنَالُہُ التَّقۡوٰی مِنۡکُمۡ ؕ کَذٰلِکَ سَخَّرَہَا لَکُمۡ لِتُکَبِّرُوا اللّٰہَ عَلٰی مَا ہَدٰىکُمۡ ؕ وَبَشِّرِ الۡمُحۡسِنِیۡنَ۝

அவற்றின் இறைச்சியும், அவற்றின் இரத்தமும் ஒருபோதும் அல்லாஹ்வைச் சென்றடைவதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களிலுள்ள இறையச்சம் தான் அவனைச் சென்றடைகிறது. அல்லாஹ் உங்களுக்கு நேர்வழியினைக் காட்டியதற்காக நீங்கள் அவனது பெருமையினை எடுத்துரைக்க இவ்வாறு அவன் அவற்றை உங்களுக்குத் தொண்டு செய்ய வைத்தான். (22:38)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நபிமொழி**

## ஈதுல் அல்ஹாவின் சிறப்பும் குர்பானியின் முக்கியத்துவமும்

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோது, மதீனா வாசிகள் வருடத்தில் இரண்டு நாட்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வந்தனர். அன்னார் (ஸல்) கூறினார்கள்; அல்லாஹ் உங்களுக்கு இவ்விரு நாட்களுக்குப் பகரமாக இவற்றை விடச் சிறந்த இரு நாட்களை நிர்ணயித்துள்ளான்; ஈதுல் ஃபித்ர் மற்றும் ஈதுல் அல்ஹா ஆகும்'.(நூல்: ஸுனன் அபூ தாவூத், கிதாபுஸ் ஸலாத், பாடம்: இரு பெருநாள் தொழுகை, ஹதீஸ் எண்: 1134)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நஹ்ருடைய நாளில் (ஈதுல் அல்ஹா அன்று) ஆதமின் மகன் (குர்பானி கொடுத்து) இரத்தம் சிந்துகின்ற அந்தச் செயலை விட மிக விருப்பமான செயல் அல்லாஹ்விடத்தில் எதுவும் இல்லை. (நூல்: ஸுனன் திர்மிதி, கிதாபுல் அளாஹி, ஹதீஸ் எண்: 1493; ஸுனன் இப்னு மாஜா, ஹதீஸ் எண்: 3126)

ஹஸ்ரத் ஸைத் பின் அர்கம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'அல்லாஹ்வின் தூதர் (ஸல் அவர்களே! இந்த குர்பானி என்பது என்ன?' என்று ஸஹாபிகள் கேட்டனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'இது உங்கள் தந்தை இப்ராஹீம் (அலை) அவர்களின் நடைமுறையாகும் (சுன்னத்தாகும்)' என்று கூறினார்கள். 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதனால் எங்களுக்கு என்ன நற்கூலி கிடைக்கும்?' என்று ஸஹாபிகள் கேட்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: '(பிராணியின்) ஒவ்வொரு உரோமத்திற்கும் ஒரு நன்மை உண்டு'.(நூல்: ஸுனன் இப்னு மாஜா, கிதாபுல் அளாஹி, ஹதீஸ் எண்: 3127)

* * * * * * * * * *

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்**

## குர்பானியின் உண்மையான பொருளும் இறையச்சத்தின் ஆன்மாவும்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் இஸ்லாமிய ஷரீஅத்தில் பல அத்தியாவசிய கட்டளைகளுக்கான முன்மாதிரிகளை நிறுவியுள்ளான். அதன்படி, மனிதன் தனது அனைத்து ஆற்றல்களுடனும், தனது முழு இருப்புடனும் இறைவனின் வழியில் அர்ப்பணமாக வேண்டும் என்ற கட்டளை மனிதனுக்கு இருக்கின்றது.

எனவே, பௌதீக குர்பானிகள் (அதாவது விலங்கு பலியிடுதல்) இதே நிலைக்கான முன்மாதிரியாகவே வைக்கப்பட்டுள்ளன. ஆனால்,

لَنۡ یَّنَالَ اللّٰہَ لُحُوۡمُہَا وَلَا دِمَآؤُہَا وَلٰکِنۡ یَّنَالُہُ التَّقۡوٰی مِنۡکُمۡ

என்று அல்லாஹ் கூறுவது போன்று, இதன் உண்மையான நோக்கம் இதே குர்பானி ஆகும். பொருள்: உங்களது குர்பானியின் மாமிசமும், இரத்தமும் இறைவனை சென்றடைவதில்லை. (அல் ஹஜ்: 38)

அதாவது, அவனுக்கு நீங்கள் எந்த அளவுக்கு அஞ்ச வேண்டும் என்றால், ஒருவகையில் நீங்கள் அவனது வழியில் மரணித்தே விட வேண்டும். மேலும், நீங்கள் உங்கள் கைகளால் குர்பானி விலங்குகளை அறுப்பதைப் போல, நீங்களும் இறைவனின் வழியில் உங்களை அறுத்துக் கொள்ள வேண்டும். ஒருவருடைய இறையச்சம் இந்த நிலையை விடக் குறைவாக இருந்தால், பின்னர் அது குறைபாடுடையதாகும்.

(ஆதாரம்: சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஜாயின், தொகுதி 23, பக்கம் 99)

* * * * * * * * * *

**தஃப்ஸீரே கபீரிலிருந்து**

## குர்பானியின் அசல் ஞானமும் இறையச்சத்திற்கான தூதுச் செய்தியும்

لَنۡ یَّنَالَ اللّٰہَ لُحُوۡمُہَا وَلَا دِمَآؤُہَا وَلٰکِنۡ یَّنَالُہُ التَّقۡوٰی مِنۡکُمۡ
کَذٰلِکَ سَخَّرَہَا لَکُمۡ لِتُکَبِّرُوا اللّٰہَ عَلٰی مَا ہَدٰىکُمۡ وَبَشِّرِ الۡمُحۡسِنِیۡنَ

என்ற வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

நினைவில் கொள்ளுங்கள், குர்பானிகளில் (பலியிடுதலில்), அவற்றின் இறைச்சியோ அல்லது அவற்றின் இரத்தமோ அல்லாஹ்வைச் சென்றடைகிறது என்பது தத்துவமல்ல. மாறாக, அவற்றில் உள்ள தத்துவம் என்னவென்றால், அவற்றின் காரணமாக இறையச்சம் பிறக்கிறது. மேலும்,அந்த இறையச்சம் இறைவனுக்கு விருப்பமானதாக இருக்கிறது.

இறைவன் விலங்குகளைப் பலியிடும்படி கட்டளையிட்டிருப்பதற்கு அவன் நவூதுபில்லாஹ்! இந்துக்களின் தெய்வங்களைப் போல இரத்தத்திற்கும், இறைச்சிக்கும் தாகமாக இருக்கிறானா என்ன?; மேலும், அவனோ அவற்றின் உயிர் பலியை ஆவலோடு ஏற்றுக் கொள்கிறானா என்ன?; மேலும் அவன் குர்பானி கொடுப்பவர்களுக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை வழங்குகிறானே? என்று சிலர் ஆட்சேபனை செய்து வருகின்றனர்.

இதற்கான பதிலை அல்லாஹ் இந்த வசனத்தில் இவ்வாறு

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## அல் ஹஜ் மற்றும் ஈதுல் அழ்ஹா

ஹஜ் என்பது இஸ்லாத்தின் ஐந்தாவது தூணாகும். ஹஜ்ஜின் கடமை மற்றும் அதன் வழிமுறைகள் பற்றிய விரிவான குறிப்பு திருக்குர்ஆனில் வந்துள்ளது. மேலும், பெருமானார் (ஸல்) அவர்கள் தாமே ஹஜ் செய்து அதன் வழிமுறைகளின்படி அமல் செய்வதற்கான நடைமுறையை தமது உம்மத்திற்காக துவங்கி வைத்து விட்டார்கள். ஸூரா ஆலி-இம்ரான், வசனம் 98-ல் அல்லாஹ் கூறுகிறான்:

அல்லாஹ்விற்காக அவர்கள் அவனது இல்லத்திற்குச் சென்று ஹஜ் செய்யட்டும். அதாவது, அந்த இல்லம் வரை செல்வதற்கு வசதி படைத்த நபர்கள் மீது கடமையாகும்.

ஸூரா அல்-ஹஜ், வசனம் 28-ல் கூறியுள்ளான்:

மக்களிடம் ஹஜ்(புனித பயணம்) குறித்துப் பிரகடனப்படுத்துவீராக! அவர்கள் நடந்தும், தொலைதூரப் பாதைகளிலிருந்து வரும் ஒவ்வொரு (நெடும் பயணத்தால்) மெலிந்த ஒட்டகங்களிலும் உம்மிடம் வருவார்கள்.

ஹஜ்ஜின் வழிமுறைகளைக் குறிப்பிட்டவாறு, அல்லாஹ் ஸூரா அல்-பக்கரா, வசனம் 159-ல் கூறுகிறான்: 'நிச்சயமாக 'ஸஃபா' மற்றும் 'மர்வா' ஆகிய மலைகள் அல்லாஹ்வின் அடையாளங்களில் உள்ளவையாகும். எனவே, எவர் இந்த ஆலயத்தில் ஹஜ் அல்லது உம்ரா செய்கிறாரோ, அவர் இவ்விரண்டிற்கும் இடையே வலம் வருவது குற்றமல்ல.

ஸூரா அல்-பக்கரா, 196 முதல் 201 வரையிலான வசனங்களில் ஹஜ்ஜின் வழிமுறைகள் விளக்கமாக இடம்பெற்றுள்ளன.

ஹஜ்ஜின் ஞானம் மற்றும் தத்துவத்தை விவரித்தவாறு, ஹஸ்ரத் மஸீஹ் மவூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஓர் ஆன்மீகப் பயணியின் இறுதி நிலை என்னவென்றால், அவர் தம் ஆன்மாவை முற்றிலுமாகத் துண்டித்துக் கொண்டு, அல்லாஹ்வின் மீதான நேசத்திலும், அன்பிலும் மூழ்கிவிடுவதாகும். உண்மையான காதலனும், நேசனும் தன் உயிரையும், தன் இதயத்தையும் அர்ப்பணித்து விடுகின்றான். கஃபாவை வலம் வருவது என்பது இந்தத் தியாகத்திற்கான ஒரு வெளிப்புற அடையாளமாகும். கீழே பூமியில் ஒரு கஃபா இருப்பது போல, வானத்திலும் ஒரு கஃபா உள்ளது. ஒரு மனிதன் இந்தத் தவாஃபை மேற்கொள்ளாத வரை, அவனது ஆன்மீகத் தவாஃப் நிறைவேறுவதில்லை. இந்தத் தவாஃபை செய்யக் கூடியவரோ அனைத்து ஆடைகளையும் கழற்றிவிட்டு உடலில் ஒரேயொரு ஆடையை மட்டும் வைத்துக் கொள்கிறார். அவ்வாறு வலம் வருபவர் முற்றிலும் ஆடைகளைக் களைந்து, இறைவனுக்காக நிர்வாணமாகி விடுகிறார். தவாஃப் செய்வது இறை நேசரின் ஓர் அடையாளமாகும். இறைநேசர் (இறைவனாகிய) அவனுடைய வீட்டைச் சுற்றி வலம் வருகின்றார்; அவருக்குள் அவரது சொந்த விருப்பம் என்று எதுவும் எஞ்சியிருப்பதில்லை. அவர் அவனைச் சுற்றியே முழுமையாகத் தியாகமாகிக் கொண்டிருக்கிறார்.(அல்-பத்ர், நாள்: 10 ஜனவரி 1907, பக்கம் 15)

ஹஜ் செய்வதற்குப் பொருளாதார வசதி, உடல் நலம், மற்றும் பாதுகாப்பான வழிப்பாதை ஆகியவை அவசியமான நிபந்தனைகளாகும். ஒருவகையில் இவை கடமையான நிபந்தனைகள் ஆகும்.

இது குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பொருளாதார நெருக்கடி, அல்லது வழிப்பாதையில் ஏற்பட்ட சீர்கேடு அல்லது நோய் காரணமாக ஒருவரால் ஹஜ் செய்ய முடியாமல் போனால், மேலும், தடை நீங்கினால் நான் ஹஜ் செய்து விடுவேன் என்ற நல்ல எண்ணம் அவரிடத்தில் இருக்கும் என்றால், அவர் ஹஜ் செய்தவராகவே கருதப்படுவார்.'

(அல்-ஃபஸ்ல், 4 மே 1922)

மேலும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஜ் என்பது நான்காவது கட்டளையாகும். பயணத்திற்கான செல்வம் இருந்து, வழிப் பாதையில் அபாயம் எதுவும் இல்லாமல் இருந்து, மனைவி மக்களின் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான ஏற்பாடு செய்ய முடியுமென்றால், பின்னர் வாழ்நாளில் ஒரு முறை ஹஜ் செய்வதற்கான கட்டளை உள்ளது. (அன்வாருல் உலூம், பாகம் 24)

அடுத்து, அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

' அல்லாஹ் ஒருவருக்கு நற்பேறு வழங்கினால், அவர் ஹஜ் செய்ய வேண்டும். இதற்குப் பல நிபந்தனைகள் உள்ளன. உதாரணமாக, பணம் இருக்க வேண்டும்; வழிப் பாதையில் அமைதி நிலவ வேண்டும். பெண்ணாக இருந்தால், அவருடன் அவருடைய கணவர் அல்லது மகன் அல்லது மஹ்ரமான ரத்த உறவுடைய ஆண் துணை இருக்க வேண்டும். (அன்வாருல் உலூம், பாகம் 47)

ஹிஜ்ரி 6-ஆம் ஆண்டு, பெருமானார் (ஸல்) அவர்கள் ஹுதைபியா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது ஹஜ் செய்யும் நோக்கத்துடன் நோக்கிப் புறப்பட்டிருந்தார்கள். ஆனால், அன்னார் (ஸல்) ஹஜ் மற்றும் உம்ரா செய்வதிலிருந்து தடுத்து நிறுத்தப்பட்டார்கள். அன்னார் (ஸல்) அங்கே ஹஜ் மற்றும் உம்ராவை செய்யவில்லை. மேலும் உடன்படிக்கை செய்தார்கள். அன்னார் (ஸல்) தாம் கொண்டு சென்றிருந்த குர்பானி விலங்குகளை அங்கேயே அறுத்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த முன்மாதிரியைப் பின்பற்றி, ஸஹாபிகளும் தங்களுடைய விலங்குகளை அறுத்து குர்பானி கொடுத்தனர். அன்னார் (ஸல்) ஹஜ் செய்யவிடாமல் தடுக்கப்பட்டபோது, அன்னார் (ஸல்) ஹஜ் செய்யவில்லை. மாறாக, அமைதியின் வழியை மேற்கொண்டார்கள். அன்னாரின் இந்தச் செயலானது, எதிர்காலத்தில் மகத்தான வெற்றிகளுக்கான கதவுகளைத் திறந்து வைத்தது.

### ஈதுல் அழ்ஹா அல்லது தியாகத் திருநாள்

துல்ஹஜ் மாதம் 10-ஆம் தேதி ஈதுல் அழ்ஹா கொண்டாடப்படுகிறது. இது குர்பானி பெருநாள் என்றும், இந்தியத் துணைக் கண்டத்தில் பெரிய பெருநாள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தப் பெருநாள், ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) ஆகியோரின் உன்னதமான தியாகத்தின் நினைவை உயிர்ப்பிக்கும் விதமாகக் கொண்டாடப்படுகிறது.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது கனவில், தம் மகன் இஸ்மாயீலை அறுத்துப் பலியிடுவது போன்று கண்டார்கள். பின்னர், இந்தக் கனவை வெளிப்படையில் நிறைவேற்ற முற்பட்டபோது, அன்னாரின் கீழ்ப்படிதலுள்ள மகனும் அதற்குத் தயாரானார். அப்போது அல்லாஹ் கூறினான்:

'நீர் உம் கனவை ஏற்கனவே மெய்ப்படுத்திவிட்டீர்.'

ஈதுல் அழ்ஹா நாளன்று பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறை என்னவாக இருந்ததென்றால், அன்னார் (ஸல்) பெருநாள் தொழுகைக்கு முன்னர் உணவு அருந்த மாட்டார்கள். அதேநேரம் ஈதுல் ஃபித்ர் (நோன்புப் பெருநாள்) அன்று காலை உணவை உட்கொண்ட பிறகே தொழுகைக்குப் புறப்படுவார்கள். ஆனால், ஈதுல் அழ்ஹா (ஹஜ் பெருநாள்) அன்று, குர்பானி விலங்கை அறுத்து பலியிட்டு அதன் இறைச்சியை உண்பார்கள். பெருநாள் திடலில் குர்பானி கொடுப்பதும் அன்னாரின் வழிமுறையாக இருந்தது. அன்னார் (ஸல்) இரண்டு விலங்குகளைக் குர்பானி கொடுப்பார்கள்; மேலும், அதில் ஒன்றை தம் சார்பாகவும், மற்றொன்றை தமது உம்மத்தின் சார்பாகவும் சமர்ப்பிப்பார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

' உள்ளங்களின் தூய்மையே உண்மையான தியாகமாகும். இறைச்சியும், இரத்தமும் உண்மையான தியாகம் அல்ல. எந்த இடத்தில் பாமர மக்கள் விலங்குகளை குர்பானி செய்கின்றார்களோ, சிறப்பான நபர்கள் உள்ளங்களை அர்ப்பணிக்கின்றார்கள். ஆனால், இந்த தியாகங்களுக்கும் மனிதனுடன் ஒரு தொடர்பு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு இந்த தியாகங்களையும் தடுக்கவில்லை.

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை வரலாற்றிலிருந்து**

**ஏகத்துவத்தை நிலைநாட்டுவது தொடர்பான சம்பங்கள்**

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 ஏப்ரல் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **03 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۝ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّينِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۝

صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ۝

தவ்ஹீதை உலகத்தில் நிலைநாட்டுவது தொடர்பாக மாநபி (ஸல்) அவர்களின் வேதனை, முயற்சி, துணிச்சல், இணைவைப்பின் எல்லா அம்சத்துக்கு எதிராகவும் ஒரு உறுதியான பாறையைப் போன்று நின்று விடுதல் மற்றும் ஒவ்வொரு சமுதாயத்தின் இணைவைப்பின் சிந்தனைகளுக்கும், போதனைகளுக்கும் எதிராக உண்மையைக் கூறுதல் குறித்து நாம் முதலில் படித்து வந்தோம்.

அதைப் பற்றிக் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஆயிரக்கணக்கான இடர்கள் உருவானபோதும், லட்சக்கணக்கான எதிரிகளும், இடையூறு செய்பவர்களும், அச்சுறுத்துபவர்களும் திரண்டு நின்றபோதும், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் துவக்கம் முதல் இறுதி மூச்சு வரை, தமது நபித்துவ வாதத்தில் எவ்வளவு உறுதிப்பாட்டுடன் நிலைத்து நின்றார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வெற்றியைக் குறித்து முற்றிலும் நம்பிக்கையிழக்கச் செய்யக்கூடியதும், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றதுமான அந்தத் துன்பங்களையும், துயரங்களையும் ஆண்டாண்டு காலமாக அனுபவித்தார்கள். அவற்றைப் பொறுத்துக்கொள்வதனால், ஏதேனும் உலகியல் நோக்கம் கிடைக்கப்பெறும் என்று கற்பனை கூட செய்ய முடியாது. நுபுவ்வத் வாதம் புரிந்ததால், ஏற்கனவே இருந்த அந்தக் கூட்டத்தையும் தாமே தம் கைகளால் இழந்து விட்டார்கள்.

அதாவது, நெருங்கிய உறவினர்களான முதலிருந்த மக்கள் கூட்டத்தையும் தாமே தம் கரங்களால் இழந்து விட்டார்கள்.

ஒரு விஷயத்தைக் கூறியதனால், இலட்சம் பிரிவினைகளை விலைக்கு வாங்கிக் கொண்டார்கள்; ஆயிரக்கணக்கான சோதனைகளைத் தம் தலைமேல் போட்டுக் கொண்டார்கள்.சொந்த ஊரை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். கொல்லப்படுவதற்காகப் பின்தொடரப்பட்டார்கள். வீடுவாசலும், உடைமைகளும் பாழாக்கப்பட்டன. பலமுறை விஷம் கொடுக்கப்பட்டது. நலன் விரும்பிகளாக இருந்தவர்கள் கெடுதல் நினைப்பவர்களாக மாறி விட்டார்கள்; நண்பர்களாக இருந்தவர்கள் பகைமை பாராட்டத் தொடங்கி விட்டனர். ஒரு நீண்ட காலத்திற்கு எத்தகைய கசப்பான அனுபவங்களை அன்னார் (ஸல்) சகிக்க வேண்டியிருந்தது என்றால், எந்தவோர் ஏமாற்றுக்காரராலோ அல்லது சூழ்ச்சிக்காரராலோ அப்படி நடக்கும்போது, உறுதியுடன் நிலைத்து நிற்பது என்பது முடியாது ஒன்று.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: அடுத்து, ஹுஸுர் (ஸல்) அவர்களின் வெளிப்படைத்தன்மை எத்தகையது என்றால், தவ்ஹீதை அறிவுறுத்தி, இணைவைப்பில் மூழ்கிக்கிடந்த அனைத்து இனங்களையும், பிரிவுகளையும், ஒட்டுமொத்த உலக மக்களையும் எதிரிகளாக்கிக் கொண்டார்கள். தம்மவர்களை, உறவினர்களை சிலை வழிபாட்டிலிருந்து தடுத்து, முதல் எதிரிகளாக்கிக் கொண்டார்கள். யூதர்களுடனும் நிலைமை சீர்கெட்டுப்போனது; ஏனெனில், பல்வேறு விதமான படைப்பின வழிபாடு, பீர் வழிபாடு மற்றும் தீய செயல்கள் ஆகியவற்றிலிருந்து அவர்களைத் தடுத்தார்கள். ஹஸ்ரத் (ஈஸா) மஸீஹ் (அலை) அவர்களைப் பொய்ப்பிப்பதையும், இழிவுபடுத்துவதையும் தடுத்தார்கள்; அதனால் அவர்களின் இதயம் மிகவும் கொதித்தது.

ஹஸ்ரத் மஸீஹைப் பொய்ப்பிப்பதிலிருந்து யூதர்களை தடுத்ததனால், அவர்களுடைய இதயம் கொதித்துப் போனது. மேலும், கடும் பகைமை கொள்ள ஆயத்தமாகினர். ஒவ்வொரு கணமும் கொலை செய்ய சந்தர்ப்பம் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

இதே போல், கிறித்தவர்களையும் கோபித்துக் கொள்ளச் செய்தார்கள். ஏனெனில், அவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவன் என்றோ அல்லது இறைவனின் மகன் என்றோ கூறவில்லை. அவர்களை சிலுவையில் அறையப்பட்டு மற்றவர்களைக் காப்பாற்றியவராகவும் ஏற்றுக் கொள்ளவில்லை. நெருப்பு வணங்கிகளும், நட்சத்திர வணங்கிகளும் கூட அதிருப்தி அடைந்தார்கள்; ஏனெனில் அவர்களும் தங்கள் தெய்வங்களை வணங்குவதிலிருந்து தடுக்கப்பட்டார்கள். ஈடேற்றம் தவ்ஹீதை மட்டுமே சார்ந்துள்ளது என்று கூறப்பட்டது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: இப்பொழுது நீதியுடன் சிந்திக்க வேண்டிய இடமாகும்! உலகத்தைப் பெறுவதற்கு இப்படியா திட்டம் தீட்டுவார்கள்? அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்கள் உலகத்தைப் பெற்றார்கள் என்று பழிசுமத்தப்படுகிறது. ஒவ்வொரு பிரிவினருக்கும் எவ்வளவு தெள்ளத் தெளிவான மற்றும் மனதுக்கு வேதனை தரக்கூடிய விஷயங்கள் கூறப்பட்டன என்றால், அதனால் அனைவரும் எதிர்ப்பதற்குக் கங்கனம் கட்டிக் கொண்டனர் என்று அந்தக் கால மக்கள் பழி சுமத்தினர். மேலும் கூறினர்: எல்லாருடைய உள்ளமும் உடைந்து போனது; தமக்கென சிறிதளவாவது மக்கள் கூட்டம் உருவாவதற்கு முன்பே, அல்லது யாராவது தாக்குதல் தொடுத்தால் தடுப்பதற்கு சிறிது வலிமை சேருவதற்கு முன்பே, அனைவருடைய இயல்புகளையும் எவ்வளவு கொதித்தெழச் செய்தார்கள் என்றால், அதனால் அந்த மக்கள் அன்னாரைக் கொலை செய்யத் துடித்தார்கள். இன்றும் இஸ்லாத்தை எதிர்க்கும் மேற்கத்திய ஆய்வாளர்கள் இதே பழியைத் தான் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது சுமத்துகிறார்கள். ஆனால், இப்படி பழி சுமத்தும் போது, யாராவது ஒரு மனிதர் பயன்பெறுவதற்காக இத்தகைய நிலையைத் தனக்கு ஏற்படுத்திக் கொள்வாரா என்று கூட அவர்கள் யோசிப்பதில்லை.........

அன்னார் (அலை)கூறினார்கள்: காலத்தைத் தம் வசப்படுத்துவதற்கு எப்படித் திட்டம் தீட்டியிருக்க வேண்டுமென்றால், சிலரைப்

பொய்யர்கள் என்று கூறியது போலவே, சிலரை உண்மையாளர்கள் என்றும் சொல்லியிருப்பார்கள்.

அதாவது, காலத்துக்குப் பின்னால் ஓடுவதாக இருந்திருந்தால், சிலரைப் பொய்யர்கள் என்று கூறியது போன்று, மகிழ்விப்பதற்காக சிலரை உண்மையாளர்கள் என்றும் கூறியிருப்பார்கள். அப்படி செய்திருந்தால், சிலர் எதிர்த்திருந்தாலும் சிலர் ஆதரவாக இருந்திருப்பார்கள். இன்னும் சொல்வதாயின், அரேபியர்களிடம், உங்களுடைய லாத் மற்றும் உஸ்ஸா (சிலைகள்)தான் உண்மையானவை என்று சொல்லியிருந்தால்(போதும்), அவர்கள் அந்தக் கணமே காலடியில் விழுந்திருப்பார்கள்; நினைத்ததை அவர்களை செய்ய வைத்திருக்கலாம். ஏனெனில், அவர்கள் எல்லாரும் உற்றாருக்காக, நெருங்கிய உறவினர்களுக்காக மற்றும் இனத்துக்காக நிற்பதில் நிகரற்றவர்களாக இருந்தார்கள். உறவுக்காரர்களாக, நெருங்கிய சொந்தக்காரர்களாக இருந்தார்கள்.

ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அதற்காகவோ அவர்கள் எந்தவொரு தியாகத்தையும் செய்ய ஆயத்தமாக இருந்து வந்தார்கள். எல்லா விஷயங்களும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தன. சிலை வழிபாட்டுக்கான போதனையினால் மட்டுமே அவர்கள் மகிழ்ச்சியடைந்திருப்பார்கள். மாநபி (ஸல்) அவர்கள், சரி, உங்கள் சிலைகள் சரியானவைதான் என்று மட்டும் சொல்லியிருந்தால்போதும், அவர்கள் மகிழ்ந்திருப்பார்கள்; மனப்பூர்வமாக அன்னாருக்குக் கீழ்ப்படிந்திருப்பார்கள். அவர்கள் இந்தக் கோரிக்கையையே வைக்கவும் செய்தார்கள்.

ஆனால், சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மவர், அந்நியர் என அனைவரையும் ஒரேநேரத்தில் பகைத்துக் கொள்வது மற்றும் அந்த நாள்களில் உலக மக்களுக்கு எதை விட அதிகம் வெறுப்பான வேறுஒன்று இருக்கவில்லையோ, எதன் காரணமாக நூற்றுக்கணக்கான சிக்கல்கள் வந்து கொண்டே இருந்தனவோ, உயிருக்கே ஆபத்து இருந்து வந்ததோ அந்தத் தவ்ஹீதை வலுவாகப் பிடித்துக் கொள்வது ஆகியவை எந்த உலகியல் ஆதாயத்துக்காக செய்யப்பட்டன? முன்னர் இதன் காரணமாகவே தமது உலகியலையும் செல்வாக்கையும் இழந்திருந்த பிறகும், மீண்டும் இன்னலை இழுத்துவரக்கூடிய அதே நம்பிக்கையில் பிடிவாதமாக இருப்பதனால், எந்த நோக்கத்தை அடைவது குறிக்கோளாக இருந்தது? அந்த நம்பிக்கையை வெளிப்படுத்தியதுமே, புதிய முஸ்லிம்கள் சிறைவாசம், சங்கிலியால் பிணைக்கப்படுதல் மற்றும் கடுமையான அடி உதையை அனுபவித்தார்கள். தவ்ஹீதைப் பறைசாற்றிய பிறகு, சுயமே அன்னார் (ஸல்) மட்டுமன்றி, அன்னாரைப் பின்பற்றுபவர்களும் துன்பங்களை அனுபவிக்க வேண்டி வந்தது.

ஒவ்வொருவரிடமும் அவரவரது இயல்பு, பழக்கவழக்கம், விருப்பம் மற்றும் கொள்கை ஆகியவற்றுக்கு மாற்றமாக கசக்கும் விஷயத்தைக் கூறி அனைவரையும் ஒரு நொடிப்பொழுதில் உயிர் எதிரிகளாக ஆக்கிக் கொண்டார்களே! ஒரிரு இனத்தவர்களுடன் கூட பிணைப்பை வைத்திருக்கவில்லையே உலகைச் சம்பாதிப்பதற்கு இதுதான் வழிமுறையா? பேராசை பிடித்தவர்களாகவும், தந்திரக்காரர்களாகவும் இருப்பவர்கள், பேராசைக் கொண்டிருப்பவர்கள், ஏதாவது ஒன்றுக்காக ஆசைப்படக்கூடியவர்கள் அல்லது சாதுர்யத்தையும், தந்திரத்தையும் காட்டக்கூடியவர்கள், தோழர்களும் பகைவர்களாகி விடுகின்ற இத்தகைய முறையைத்தான் கையாள்வார்களா? ஏதாவது சூழ்ச்சி செய்து உலகைச் சம்பாதிக்க நினைப்பவர்கள், ஒரே நேரத்தில் ஒட்டுமொத்த உலகத்தையும் (தம்மைப்) பகைத்துக்கொள்ளத் தூண்டுவதும், தமது உயிரை எப்போதும் ஆபத்தில் வைத்திருப்பதும்தான் அவர்களுடைய நெறிமுறையாக இருக்குமா? அவர்களோ தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள அனைவருடனும் சமரசப் போக்கையே கடைப்பிடிப்பார்கள்; ஒவ்வொரு பிரிவினருக்கும் உண்மைக்கான சான்றிதழையே அளிப்பார்கள். இறைவனுக்காக ஒருமுகப்படுவது அவர்களின் பழக்கமாக எங்கே இருக்கிறது? அவர்கள் இறைவனின் ஏகத்துவத்தைப் பற்றியோ, அவனது மகத்துவத்தைப் பற்றியோ எங்கே கவலைப்படுகிறார்கள்? இறைவனுக்காக அநியாயமாகத் துன்பத்தை அனுபவிக்க அவர்களுக்கு என்ன அவசியம்? அவர்களோ வேட்டைக்காரனைப் போல, வேட்டையாட எளிதாக இருக்கின்ற வழியிலேயே வலையை விரிப்பார்கள்.

ஏமாற்றி, பிடிக்கவே வேண்டும் எனில், வசப்படுத்தவே வேண்டும் எனில், வேட்டைக்காரனைப் போல வலை விரித்து, குறைந்த உழைப்பில் மிக அதிகமாக உலகியல் பலன் கிடைக்கும் வழியையே தேர்ந்தெடுப்பார்கள். நயவஞ்சகம் அவர்களின் தொழிலாகவும், பிறரை மகிழ்வித்தல் அவர்களின் இயல்பாகவும் இருக்கும். அனைவரிடமும் இனிமையாகப் பேசுவதும், திருடன் முதல் சாது வரை அனைவரிடமும் சமமான தொடர்பு வைத்திருப்பதும் அவர்களின் ஒரு சிறப்பான கொள்கையாக இருக்கும். முஸ்லிம்களிடம் 'அல்லாஹ் அல்லாஹ்' என்றும், இந்துக்களிடம் 'ராம் ராம்' என்றும் சொல்ல எப்போதும் ஆயத்தமாக இருப்பார்கள். ஒவ்வொரு அவையிலும் ஆமாம் என்றால் ஆமாம் என்றும், இல்லை என்றால் இல்லை என்றும் கூறி வருவார்கள். அவைக்குத் தகுந்தாற்போல் தங்களை மாற்றிக்கொள்வார்கள். அவர்களுக்கு இறைவனுடன் என்ன தொடர்பு? அவனிடம் உண்மையாக இருக்க வேண்டிய தேவை அவர்களுக்கு என்ன? தமது மகிழ்ச்சியான வாழ்க்கையை வீணாக அக்கம் பக்கத்தின் துன்பத்தில் ஆழ்த்திக்கொள்ள அவர்களுக்கு என்ன தேவை வந்தது?

கற்றுக் கொடுப்பவர் அவர்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கும் ஒரு பாடமே என்னவாக இருக்கும் என்றால், உன்னுடைய பாதைதான் நேரானது, உன்னுடைய கருத்துதான் சரியானது, நீ புரிந்து வைத்திருப்பதுதான் சரியானது என்றே ஒவ்வொருவரிடமும் சொல்ல வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், அவர்களுக்கு சத்தியம்-அசத்தியம், உண்மை-பொய், நன்மை-தீமை ஆகியவற்றில் அக்கறையே இருக்காது. மாறாக, யார் மூலமாக அவர்களுக்கு ஆதாயம் கிடைக்கிறதோ அவரே அவர்களைப் பொறுத்தவரை இறையடியாராக, சித்தராக மற்றும் நற்பண்பாளராக இருக்கிறார். **யாரைப் புகழ்வதால் வயிற்றுக்கான நரகம் நிறைவதாகத் தெரிகிறதோ, அவரையே ஈடேற்றம் அடையக்கூடியவராகவும், சொர்க்கத்திற்கு உரியவராகவும், நிரந்தரமான வாழ்வைப் பெற்றவராகவும் ஆக்கிவிடுவார்கள்.** அவரே அவர்களுக்கு அனைத்துமாக ஆகி விடுகின்றார். ஆனால், நபிமார்களின் முத்திரையான அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை கவனித்துப் பார்க்கும்போது, பெருமானார் (ஸல்) அவர்கள் மிக உயரிய நிலையில் ஒருமுகப்பட்டவர், துய உள்ளத்தை உடையவர், இறைவனுக்காகத் தம் உயிரையும் அர்ப்பணிக்கத் துணிந்தவர் என்பதும், படைப்பினங்கள் மீதான அச்சம் மற்றும் எதிர்ப்பார்ப்பு ஆகியவற்றை விட்டும் முற்றிலும் முகந்திருப்பக்கூடியவர் என்பதும், இறைவன் மீது மட்டுமே தவக்குல் வைக்கக்கூடியவர் என்பதும் மிகவும் தெளிவாக, வெளிப்படையாக, பளிச்செனத் தெரிகிறது. அன்னார் (ஸல்) இறைவனின் நாட்டம் மற்றும்

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

விருப்பத்தில் தம்மைத் தொலைத்துக் கொண்டும், மாய்த்துக் கொண்டும், தவ்ஹீதைப் பறைசாற்றுவதனால் தமக்கு என்னென்ன இன்னல்கள் வரும்; இணைவைப்பாளர்களால் எந்தெந்தத் துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவிக்க நேரும் என்பதைப் பற்றியெல்லாம் சற்றும் கவலைப்படவில்லை. மாறாக, அனைத்துக் கொடுமைகளையும், சிரமங்களையும், இன்னல்களையும் தாம் தாங்கிக்கொண்டு தம் எஜமானின் கட்டளையை நிறைவேற்றினார்கள். கடுமையான போராட்டம், பரப்புரை மற்றும் அறிவுரை ஆகியவற்றை செய்வதில் உள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றினார்கள். எந்த அச்சுறுத்துபவரையும் அன்னார் (ஸல்) ஒரு பொருட்டாகவே கருதவில்லை. எல்லா நபிமார்களின் வாழ்க்கை நிகழ்வுகளிலும், இத்தகைய ஆபத்தான சூழல்கள் இருந்தும், இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை வைத்து, ஷிர்க்கையும் படைப்பினங்களை வணங்குவதையும் பகிரங்கமாகத் தடுப்பவர், இவ்வளவு எதிரிகள் இருந்தும், இத்தகைய உறுதி மனப்பான்மையுடனும், உறுதியான நிலைப்பாட்டுடனும் இருந்தவர் ஒருவர் கூட இல்லை என்று நாம் உண்மையாகவே கூறுகிறோம்.

நபிமார்களின் வரலாற்றில் பார்த்துக் கொள்ளுங்கள்! இவ்வளவு மன உறுதி இருப்பதை எங்கும் காண முடியாது!

எனவே, இந்த அனைத்து சூழ்நிலைகளும், மாநபி (ஸல்) அவர்களின் அகத்தூய்மைக்கு எவ்வாறு சான்றளிக்கின்றன என்று சற்று நேர்மையுடன் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது தவிர, ஓர் அறிவாளி இந்த நிலைமைகளை இன்னும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றிய அந்தக்காலம், உண்மையில், ஒரு மேன்மையான, மகத்தான இறை சீர்திருத்தவாதி மற்றும் விண்ணின் வழிகாட்டியின் மிகக் கடுமையான தேவையிருந்த அத்தகைய ஒரு காலமாக அதன் அப்போதைய நிலைமை இருந்தது தெரியவரும். வழங்கப்பட்ட போதனைகளும் நிஜமாகவே உண்மையானவையாகவும், அக்காலத்திற்கு மிகவும் தேவையானவையாகவும் இருந்தன.

காலம் எவ்வளவு கெட்டுப் போயிருந்தது என்றால், அப்பொழுது ஒரு வழிகாட்டியின், ஒரு சீர்திருத்தவாதியின், ஒரு வழிநடத்துபவரின் தேவை இருந்தது; அப்போதுதான், அந்தக் காலத்தில்தான் அன்னார் வருகை தந்தார்கள். அக்காலத்தின் அனைத்துத் தேவைகளும் நிறைவேறுகின்ற வகையில், அனைத்தையும் உள்ளடக்கியதாக அந்த போதனை இருந்தது. அந்த போதனை எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், லட்சக்கணக்கான உள்ளங்களை உண்மை மற்றும் நேர்மையின் பக்கம் ஈர்த்துக் கொண்டு வந்தது; லட்சக்கணக்கான நெஞ்சங்களில் ' لَا اِلٰهَ اِلَّا اللهُ ' என்ற முத்திரையைப் பதிக்கச் செய்தது. நுபுவ்வத்தின் மையக் குறிக்கோள் எதுவோ, எது நோக்கமோ, அதாவது, ஈடேற்றம் பெறுவதற்கான போதனை, அதனை அன்னார் (ஸல்) எந்த அளவுக்கு முழுமையை எட்டச் செய்தார்கள் என்றால், அந்த முழுமை வேறு எந்த நபியின் மூலமாகவும் எந்தக் காலத்திலும் நடைபெறவில்லை.

ஆக, இந்த நிகழ்வுகளை உற்று நோக்கும்போது, நிச்சயமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்ட உண்மையான வழிகாட்டி ஆவார்கள் என்ற சான்றளிப்பு உள்ளத்தி◌ருந்து கட்டுபாடின்றி பொங்கி எழும். உள்ளப்பகைமையாலும் பிடிவாதத்தாலும் மறுப்பவர்களின் நோய், அவர்கள் இறைவனையே மறுத்தாலும் சரி, குணப்படுத்த முடியாதது.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

இல்லையெனில், அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் முழுமையாக ஒன்றிணைந்திருக்கும் உண்மைக்கான இந்த அனைத்துத் தடயங்களில் ஏதாவது ஒன்றையாவது, வேறு எந்த நபியிடமாவது, யாராவது நிரூபித்துக் காட்டட்டுமே, நாங்களும் அறிந்து கொள்கிறோம்!

அடுத்து, கூறுகிறார்கள்: இந்துக்கள் மற்ற அனைத்து இறைத்தூதர்களையும் இறைமறைகளையும் நிராகரித்து விட்டு, வேதங்கள்தான் எல்லாமே என்று வேதங்களின் புகழ் பாடிக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் இறைவனின் அனைத்துப் போதனைகளும் பைபிளோடு முடிந்துவிட்டதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு இறைமறையின் மதிப்பும் தகுதியும், அது எந்த அளவு ஓரிறை கொள்கைக்குப் பலனளிக்கிறது என்பதை வைத்தே அளவிடப்படுகிறது என்ற விஷயத்தை அவர்கள் புரிவதில்லை. எந்த மறைநூல் தவ்ஹீத் குறித்து அதிகம் பலன் தருகிறதோ, அதுவே தரத்தில் உயர்ந்தது. ஒரு இறைமறையின் உண்மையான நோக்கம், அதில் ஓரிறைக் கொள்கை பற்றிய பாடம் அதிகமாக இருக்க வேண்டும் என்பதுதான். இதனால்தான், இறைவனின் ஏகத்துவத்தை மறுப்பவரிடம் எத்தகைய நற்பண்புகள் ஒருங்கே இருந்தாலும், அவரால் ஈடேற்றம் அடைய முடியாது. ஒருவரிடம் அனைத்து நல்ல குணங்களும் ஒரு சேர இருக்கின்றன; ஆனால், அவர் தவ்ஹீதை மறுப்பவராயின், அல்லாஹ்வின் பார்வையில் அவர் ஈடேற்றம் பெறுபவரல்ல. ஈடேற்றம் எதைச் சார்ந்திருக்கின்றதோ அந்தத் தவ்ஹீத் எந்த மறையின் மூலம் உலகில் மற்றவற்றைவிட அதிகமாகப் பரவியது என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேதங்கள் மூலம் எந்த நாட்டில் ஏகத்துவம் பரவியுள்ளது என்று யாராவது சொல்லுங்களேன்! பைபிள் மூலம் ஓரிறைக் கொள்கை பரவிய எந்த ஒரு நாடும் தென்படுவதில்லை.

இன்னும் சொல்வதாயின், பைபிளைப் பின்பற்றுபவர்கள் ஏகத்துவவாதியை ஈடேற்றம் பெறுபவராகவே கருதுவதில்லை. தவ்ஹீதை ஏற்பவர்களை ஈடேற்றம் அடைந்தவராகக் கருதுவதில்லை. பாதிரியார்கள் தவ்ஹீத்வாதிகளை ஓர் இருளான நெருப்பில் அனுப்புகிறார்கள். ஓரிறைக் கொள்கையை ஏற்பவர்களைப் பற்றி, ஏக இறைவனை ஏற்பவர்களைப் பற்றி, மூன்று கடவுள்களை ஏற்காதவர்களைப் பற்றி அவர்களோ நெருப்பில் விழுவார்கள்; அங்கு அழுது கொண்டும், பல்லைக் கடித்துக் கொண்டும் இருப்பார்கள் என்று (பாதிரியார்களான) அவர்கள் சொல்கிறார்கள். அவர்களுடைய கூற்றுப்படி, இறைவன் மட்டுமே அந்தக் கருமையான நெருப்பிலிருந்து தப்புவார். அவர்களின் கூற்றுப்படி, இறைவனுக்கு மரணம், துன்பம், பசி, தாகம், வலி, வேதனை, உருவம் எடுத்தல் மற்றும் ஊடுருவல் ஆகியவற்றை எப்போதும் சாத்தியம் எனக் கருதுபவர் மட்டுமே அந்தக் கருமையான நெருப்பிலிருந்து தப்பிக்க முடியும். இல்லையெனில் தப்பிக்க வழியே இல்லை.

அதாவது, இதில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்கள். (அவர்களுடைய) அந்த கற்பனை சொர்க்கம் ஐரோப்பாவின் இரு பெரும் இனங்களான ஆங்கிலேயர்களுக்கும் ரஷ்யர்களுக்கும் பாதி பாதியாகப் பிரித்துக் கொடுக்கப்படுமாம். இப்பொழுது இதில் இன்னும் சில பெரிய நாடுகளும் பிரிந்து விட்டன. அமெரிக்கர்களும் சொல்கிறார்கள்; சொல்லப்போனால், அமெரிக்காவின் சில தலைவர்களின் தரப்பிலிருந்து, ஈஸா மஸீஹ் அவர்களின் இரண்டாம் வருகை டிரம்ப் வடிவில் இருக்கலாம் என்ற அளவுக்கு சொல்லத் தொடங்கிவிட்டார்கள். இன்னாலில்லாஹ்!

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: பாதி பாதியாகப் பிரித்துக் கொடுக்கப்படுமாம். ஏனைய ஏகத்துவவாதிகள் அனைவரும், இறைவனை அவனது முழுமைத் தன்மைக்கு களங்கம் விளைவிக்கும்

அனைத்துக் குறைகளிலிருந்தும் தூய்மையானவன் எனக் கருதிய குற்றத்திற்காக நரகத்தில் தள்ளப்படுவார்களாம்.

இதை நாம் எழுதியதன் நோக்கம் என்னவென்றால், இன்று உலகப் பரப்பில் தவ்ஹீத் என்று அழைக்கப்படுவது, மாநபி (ஸல்) அவர்களின் உம்மத்தைத் தவிர, வேறு எந்தப் பிரிவினரிடமும் காணப்படுவதில்லை. கோடிக்கணக்கான படைப்பினங்களை இறைவனின் ஏகத்துவத்தில் நிலைநிறுத்தி, மிகவும் கண்ணியத்துடன் அந்த உண்மையான இறைவனை நோக்கி வழிநடத்தியதற்கான அடையாளம் திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த மறையிலும் கிடைப்பதில்லை. ஒவ்வொரு இனத்தவரும் தமக்கென ஒரு செயற்கையான கடவுளை உருவாக்கிக் கொண்டனர். ஆனால், தொன்று தொட்டே அழியாதவனும், மாறாதவனும், தனது தொன்மையான பண்புகளில் முன்பு இருந்தது போன்றே இருப்பவனுமான அவனே முஸ்லிம்களின் இறைவன் ஆவான்.


எனவே, இந்த நிகழ்வுகள் அனைத்தும் எத்தகையவை எனில், இவற்றின் மூலம் இஸ்லாத்தின் வழிகாட்டி அவர்களின் நபித்துவத்தின் உண்மைத்தன்மை சூரியனைப் போன்று வெளிப்படையாக உள்ளது. தெள்ளத்தெளிவான ஒளியைப் போன்றது; சூரியனைப் போன்று ஒளிவீசக்கூடியது. ஏனெனில், நபித்துவத்தின் பொருளும், இறைத்தூதின் மையக் குறிக்கோளும், அன்னாருடைய அருளுக்குரிய இயல்பிலேயே நிரூபணமும் ஆகின்றன; ஆராய்ச்சி முடிவாகவும் இருக்கின்றன. அனைத்தும் இவ்வாறே நிரூபணமாகின்றன. உருவாக்கப்பட்ட பொருளை வைத்து அதை உருவாக்கியவர் அடையாளம் காணப்படுவதைப் போன்று, அறிவாளிகளும் அப்போதிருக்கும் சீர்திருத்தத்தைக் கண்டு இறைவனின் அந்த சீர்திருத்தவாதியை அடையாளம் கண்டு கொள்கிறார்கள். உருவாக்கக்கூடியவர், பொருளை உருவாக்கக்கூடியவர் ஒருவர் இருந்தால், அவரால் உருவாக்கப்பட்ட அந்தப் பொருள் இருக்கிறது. ஏதேனும் ஒரு கருவியையோ அல்லது ஒரு பொருளையோ உருவாக்கியவர், அதை எவ்வளவு மேன்மையாக அல்லது எந்தத் தரத்தில் உருவாக்கியிருக்கிறார் என்பதைக் கொண்டே அவர் அடையாளம் காணப்படுகிறார். அதேபோல், ஒரு இறை சீர்திருத்தவாதி எப்படி அடையாளம் காணப்படுகிறார் என்றால், அவர் தவ்ஹீதைப் பரப்புபவராக இருப்பார்.

இதேபோன்று, பெருமானார் (ஸல்) அவர்கள் இறையுதவியால் ஆதரவு வழங்கப்பட்டார்கள் என்பதை நிரூபிக்கும் இன்னும் இத்தகைய ஆயிரக்கணக்கான நிகழ்வுகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக, இது ஒரு வியக்கச் செய்யும் நிகழ்ச்சி இல்லையா! எல்லா சமுதாயங்களும் செல்வம், படை, அறிவு ஆகியவற்றில் முழுமையான ஆற்றல் பெற்றிருந்த காலத்தில், பொருள் வசதியும் அற்ற, ஆற்றலும் இல்லாத, உதவியும் அற்ற, எழுத்தறிவும் பெறாத, பெற்றோரையும் இழந்த, தனித்தவராகவும் இருந்த ஓர் ஏழை அவர்கள் கொண்டு வந்த ஒளிமிக்க போதனை, அதன் வலுவான சான்றுகளாலும், தெளிவான அத்தாட்சிகளாலும் அனைவரையும் வாயடைக்கச் செய்து, நுட்பஞானிகள், ஃபிளாஸஃபர்கள், அதாவது, தத்துவவாதிகள் எனக் கூறித் திரிந்த பெரும் புள்ளிகள், பேரறிஞர்கள் ஆகியோரின் தவறுகளை வெளிச்சமிட்டுக் காட்டியதும், உதவியற்றவராகவும் ஏழையாகவும் இருந்தும், பேரரசர்களை அரியணைகளிலிருந்து வீழ்த்தி, அதே அரியணைகளில் ஏழை எளியவர்களை ஏற்றிவிடும் அளவுக்கு ஆற்றலை வெளிப்படுத்தியதும், இறையுதவி இல்லை என்றால் வேறென்ன? அறிவு, ஞானம், ஆற்றல் மற்றும் வலிமை ஆகியவற்றில் முழு உலகையும் விட மேலோங்குவது இறையுதவி இன்றியும் நடக்குமா என்ன?(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 2, ரூஹானீ கஸாயீன் தொகுதி 1, பக்கம் 108 - 119)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: வரலாறுகள் தெளிவாக எடுத்துரைக்கின்றன; மேலும், (உண்மை மற்றும் பொய்யைப் பிரித்துக்காட்டக்கூடிய) திருக்குர்ஆனின் பல இடங்களில் இதனை மிகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளது: பெருமானார் (ஸல்) அவர்கள் எத்தகைய காலத்தில் தோன்றினார்கள் என்றால், உலகில், முழு உலகில் வழிகேடும் படைப்பின வழிபாடும் பரவியிருந்த நேரம் அது. மக்கள் அனைவரும் உண்மையான கொள்கைகளைக் கைவிட்டிருந்தார்கள். நேரான பாதையை மறந்து விட்டு ஒவ்வொரு பிரிவினரும் தனித்தனியான பித்அத்களின் வழிகளை மேற்கொண்டிருந்தார்கள். அரேபியாவில் சிலை வணக்கம் உச்சத்தில் இருந்தது. பாரசீகத்தில் நெருப்பு வழிபாடு தீவிரமாக இருந்தது. அந்தக் காலத்தில் ஈரானிய மக்கள் அக்னியைப் பூஜிப்பவர்களாக இருந்தார்கள்; நெருப்பை வணங்கி வந்தார்கள். இந்தியாவில் சிலை வணக்கம் மட்டுமின்றி, இன்னும் நூற்றுக்கணக்கான படைப்பின வழிபாடுகள் பரவியிருந்தன. அந்த நாட்களிலேயே எந்த நூல்களின் அடிப்படையில் இறைவனின் அடியார்கள்பலர் கடவுள்களாக்கப்பட்டு, அவதாரங்களை வழிபடுவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டதோ அந்த நூல்கள் பல இயற்றப்பட்டிருந்தன. பாதிரியார் வார்டு அவர்களின் கூற்றுப்படி - இங்கே ஜான் டேவன்போர்ட் என்று எழுதப்பட்டுள்ளது.

அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்தப் பாதிரியாரைப் பற்றி கூறுகிறார்கள்.

அவர் கூறுகிறார். இன்னும் பல ஆங்கிலேய அறிஞர்களும் இதைக் கூறியுள்ளார்கள்: அந்த நாள்களில் கிறித்தவ மதத்தை விட அதிகம் சீர்கெட்ட மதம் வேறெதுவும் இருக்கவில்லை. ஜான் டேவன்போர்ட் அவர்களும் இதை எழுதியுள்ளார். அன்னாருடைய காலத்தில் மேலும் பலரும் இதை எழுதியுள்ளனர். அவர்களுடைய இந்த விஷயங்கள் அன்னாருக்குத் தெரியவந்தன. கிறிஸ்தவ வரலாற்றாசிரியர்கள், அறிவார்ந்த ஆங்கிலேயர்கள், கிறிஸ்தவம் இருப்பதைப் போல மிகவும் சீர்கெட்ட மதம் வேறெதுவும் இருந்திருக்கவில்லை என்று எழுதியிருக்கிறார்கள். பாதிரியார்களின் தீய நடத்தையாலும் தவறான கொள்கைகளாலும், மத ரீதியான பகுதியின் மீது ஒரு பெரிய கறை படிந்திருந்தது. கிறிஸ்தவ நம்பிக்கைகளில், ஒன்றல்ல இரண்டல்ல, மாறாக, பல பொருட்கள் இறைவனின் இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தன.




எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள் எத்தகைய பொதுவான வழிகேட்டின் காலத்தில் அனுப்பப்பட்டார்கள் என்றால், அப்பொழுது அக்காலத்தின் அன்றைய சூழல் ஒரு மாபெரும் மருத்துவரை, சீர்திருத்தவாதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது; இறைவனின் வழிகாட்டுதலுக்கு உச்சகட்ட தேவை இருந்தது. பிறகு, அன்னார் தோன்றி ஓர் உலகையே தவ்ஹீத் மற்றும் நற்செயல்களால் ஒளிரச் செய்ததும், தீமைகளின் தலையூற்றான இணைவைப்பையும், படைப்பின வழிபாட்டையும் வேரறுப்பதும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவனின் உண்மையான தூதர் என்பதற்கும், எல்லாத் தூதர்களைக் காட்டிலும் மேலானவர் என்பதற்கும் தெளிவான சான்றாகும்.

அன்னார் (ஸல்) உண்மையாளர் ஆவார்கள் என்பது இதிலிருந்தே நிரூபணமாகிறது: அந்தப் பொதுவான வழிகேட்டின் காலத்தில், இயற்கை நியதி ஓர் உண்மையான வழிகாட்டியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

இறைவனின் நடைமுறை ஓர் உண்மையான வழிநடத்துபவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. மக்கள் சீர்கெடும் போது, அல்லாஹ் தன் தூதர்களை அனுப்புகிறான் என்பதே அவனது நடைமுறையாக இருந்தது. ஏனெனில், அனைத்து உலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கின்ற இறைவனின் தொன்மையான சட்டமும் இதுதான். அதாவது, உலகில் ஏதாவது ஒரு வகையான கடினமும், இன்னலும் அதன் உச்சத்தை அடையும்போது, அதை நீக்குவதன் பக்கம் இறைவனின் கருணை திரும்புகிறது. எடுத்துக்காட்டாக, மழை பொய்த்துப்போய் கடும் பஞ்சம் நிலவும்போது, மழையே பொழியாமல் போகும்போது, பஞ்சம், வறட்சி ஏற்படும்போது, கடும் பஞ்சத்தினால் படைப்பினங்கள் அழியத் தொடங்குகின்றன. மக்கள் இறக்க ஆரம்பிக்கிறார்கள். அப்பொழுது இறுதியில், கருணையுள்ள இறைவன் மழையைப் பொழியச் செய்கிறான். அதேபோல், கொள்ளை நோயினால் லட்சக்கணக்கான மக்கள் இறக்கும்போது, காற்றைத் தூய்மைப்படுத்துவதற்கான ஏதாவது ஒரு வழி பிறக்கிறது அல்லது ஏதாவது மருந்தே உருவாகி விடுகிறது. ஒரு சமுதாயம் யாரேனும் ஓர் அநீதியாளரின் பிடியில் வரும்போது, இறுதியில், நீதிமானான, முறையீடுகளைக் கேட்பவரான ஒருவர் தோன்றுகிறார்.

ஆக, இவ்வாறே மக்கள் இறைவன் பக்கம் செல்லும் வழியை மறந்து விடும்போது, தவ்ஹீதை, உண்மையான(வான இறை)வனை வணங்குவதை விட்டு விடும்போது, எந்தஅளவு சீர்கேடு ஏற்பட்டு விட்டதோ அதை சீர்திருத்துவதற்காக, மேலான இறைவன் தன் புறமிருந்து யாரேனும் ஓர் அடியாருக்கு முழுமையான அகப்பார்வை வழங்கி, தனது உரையாடல் மற்றும் இல்ஹாம் வழங்கப் பெறும் கண்ணியமளித்து, ஆதமின் சந்ததிகளின் நேர்வழிக்காக அனுப்புகிறான். இதில் உள்ள மெய்யான உண்மைத்துவமாவது, கையும் எனப்படும் உலகை நிலைபெறச் செய்திருக்கும் படைப்பாளன், உலகம் உருவானதும், எஞ்சியிருப்பதும் எவன் மூலம் இருக்கிறதோ, எவன் சார்பாக இருக்கிறதோ - அவன் சார்பாக இருக்கிறது. அவனால் இருக்கிறது. அத்தகைய - அவன் அருள் பொழியும் தனது எந்தவொரு பண்பையும் படைப்பினத்தை விட்டும் விலக்கி வைப்பதுமில்லை. வீணானதாகவும், பயனற்றதாகவும் விடுவதுமில்லை. மாறாக, அவனுடைய ஒவ்வொரு பண்பும் அதற்கு உரிய தருணத்தில் உடனடியாக வெளிப்பட்டு விடுகிறது. ஆக, ஒவ்வொரு பேரழிவின் ஆதிக்கத்தைத் தகர்ப்பதற்காகவும், அதற்கு நிகராக இருக்கின்ற இறைவனின் பண்பு வெளிப்படுகிறது என்ற விஷயத்தில் அறிவின் ஆலோசனைப்படி உறுதி(கொள்வது) கட்டாயமாகிறது. ஒரு விஷயம் வரலாறுகள் மூலமாகவும், சுயமே எதிர்ப்பாளர்களின் ஒப்புதல் மூலமாகவும், குறிப்பாக, திருக்குர்ஆனின் தெளிவான எடுத்துரைப்பின் மூலமாகவும் நிரூபணமாகி விட்டது. அதாவது, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தோன்றிய காலத்தில், ஆதிக்கம் பெற்ற பேரழிவு எதுவென்றால், உலகத்தின் அனைத்து சமுதாயங்களும் தவ்ஹீத், கலப்பற்றதன்மை மற்றும் உண்மையான(வான இறை)வனை வணங்குதல் எனும் நேர்வழியைக் கைவிட்டிருந்தார்கள். அப்போதிருந்த அந்த சீர்கேட்டை சீர்திருத்தியவர், ஒவ்வோர் உலகையும் இணைவைப்பு மற்றும் படைப்பின வழிபாடு எனும் இருள்களிலிருந்து வெளியே கொண்டுவந்து, ஓரிறைக் கொள்கையில் நிலைநிற்கச் செய்தவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மட்டுமே ஆவார்கள்; வேறவரும் கிடையாது என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றே! ஆக, மாநபி (ஸல்) அவர்கள் இறைவன் புறமிருந்து வந்த உண்மையான வழிகாட்டியாவார்கள் என்பது இவ்வனைத்து நிகழ்வுகள் மூலமாகவும் முடிவாகிறது. (பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 2, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 112 - 114, அடிக்குறிப்பு எண் 10)

எனவே, உண்மையான முறையில் ஓரிறைக் கொள்கையை உலகத்தில் நிலைநாட்டியவர் ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்களே ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தவ்ஹீதுக்காக எவ்வாறெல்லாம் முயற்சி மேற்கொண்டு வந்தார்கள் என்பது குறித்து பல மேற்கோள்களை (எடுத்து வைத்து), பல நிகழ்வுகளை (முன்வைத்து) இது தொடர்பான சம்பவங்களையும் நான் கடந்த குத்பாக்களில் எடுத்துரைத்திருக்கிறேன். பிறகு, அல்லாஹ்வின் வாக்குறுதிகளுக்கு ஏற்ப மாநபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் அவர்களைத் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக இந்தக் காலத்தில் அல்லாஹ் தன்புறமிருந்து அனுப்பினான் என்பதை நாம் பார்க்கிறோம். ஏனெனில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி ஆன ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீ (அலை) அவர்கள், இந்தக் காலத்தில், பெருமானார் (ஸல்) அவர்களின் போதனை மற்றும் சுன்னத்தின் செயல் வடிவமாக திகழ்ந்தார்கள். தம் எஜமானரைப் பின்பற்றியவாறு, அல்லாஹ்வின் தவ்ஹீதைப் பரப்புவதற்காக அன்னாரது உள்ளமே ஒரு வேதனையால் நிரம்பியிருந்தது.

ஆக, அன்னாருடைய படைப்புகள் மற்றும் அன்னாரின் செயல் வடிவமான வாழ்க்கையில் இதற்கான பல எடுத்துக்காட்டுகள் நமக்குத் தென்படுகின்றன. அவற்றில் சிலவற்றை நான் எடுத்துரைக்கிறேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ் எம்முடன் வியத்தகு முறையில் நடந்து கொள்கிறான்.

أَنْتَ مِنِّيْ بِمَنْزِلَةِ تَوْحِيْدِيْ وَتَفْرِيْدِيْ

என்ற எமக்கு வந்த இல்ஹாம், ஒரு புது வகையான இல்ஹாம் ஆகும். நாம் இதற்கு முன்னர் எந்த இல்ஹாமிய வரியிலும் இதுபோன்ற சொற்களைப் பார்க்கவில்லை. எமது சிந்தையில் வரக்கூடிய இதற்கான பொருள் இதுவாகும்: உலகில் இறைவனின் ஏகத்துவம் மிக மிக அதிகமாக அவமதிக்கப்பட்டு, அதை மிகவும் இழிவாகப் பார்க்கப்படும் பொழுது, அத்தகைய காலத்தில் இறைவன் புறமிருந்து வருகின்ற அத்தகைய நபர் தவ்ஹீத் எனும் இடத்திலேயே இருக்கிறார். இத்தகைய நேரத்தில் வருபவர் தவ்ஹீதின் மொத்த உருவமாக இருக்கிறார். (மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 1, 2022-ம் ஆண்டு பதிப்பு)

அன்னார் (அலை) இதனை ஓர் அவையில் எடுத்துக் கூறியிருந்தார்கள். அதனை ஒரு பத்திரிகை இவ்வாறு எழுதியுள்ளது. மேலும், மற்றொரு பத்திரிகை, பத்ர் (பத்திரிகை) சற்று விரிவாக இவ்வாறு எழுதியுள்ளது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்ட அந்த நபருக்குத் தவ்ஹீதுக்கான தாகம் எப்படி ஏற்படுத்தப்படுகிறது என்றால், அவர் தம்முடைய அனைத்து நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை ஒருபக்கம் வைத்துவிட்டு, தவ்ஹீதை நிலைநாட்டுவதில் சுயமே தவ்ஹீதின் ஒரு மொத்த உருவமாக ஆகி விடுகிறார். அவரது பழக்க வழக்கங்கள், அசைவு-அசைவின்மை மற்றும் ஒவ்வொரு சொல் மற்றும் செயல் ஆகியவற்றில் தவ்ஹீதின் சுடர் அவரிடம் நிலைத்திருக்கின்றது. (அல் பத்ர், தொகுதி 2, எண்: 12, ஏப்ரல் 10, 1903, பக்கம் 91)

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: ஒவ்வொரு நபரும் தனக்கான ஒரு நோக்கம் மற்றும் இலக்கை நிர்ணயிக்கிறார். ஆனால், அல்லாஹ்வின் மீதான நேசத்தில் மூழ்கியிருக்கின்ற அந்த நபரின் நோக்கமும், குறிக்கோளும், அல்லாஹ்வின் ஏகத்துவமாகவே இருக்கிறது. அவர் தன்னுடைய இயல்பான உணர்ச்சிகள் மற்றும் நோக்கங்களை விடவும் அல்லாஹ்வின் ஏகத்துவத்துக்கு முதன்மை அளிக்கிறார். தன்னுடைய அனைத்துத்

தேவைகளையும் பின்னுக்குத் தள்ளி விடுகிறார். அதே போன்று, ஒவ்வொரு நபருக்கும் தன்னுடைய நோக்கங்களுக்கான ஒரு சிலை இருக்கிறது. அவர் அது வரை சென்றடைய விரும்புகிறார். ஆனால், அது வரை எட்ட வைப்பதும் அல்லது அவரது ஆயுளை முன்னரே முடித்து விடுவதும் அல்லாஹ்வின் விருப்பத்திற்குட்பட்டது.

வணிகர்களான மக்களுக்கு, வியாபாரம் செய்யும் மக்களுக்கு மற்றும் உலக நோக்கங்களைப் பெறக்கூடிய மக்களுக்கு நோக்கங்களைப் பெறுவதற்குப் பெரும் ஆசைகள் இருக்கும். அவர்கள் தமக்கான ஓர் இலக்கை நிர்ணயித்திருப்பார்கள். ஆனால், ஒன்று அல்லாஹ் அவர்களை அதுவரை கொண்டு சேர்த்து விடுகிறான். அல்லது அதற்கு முன்பு அவர்களுடைய கதை முடிந்து விடுகிறது. அத்தகையவர் தனது பொருள் அல்லது கண்ணியம், மதிப்பு, மனைவி மக்கள் அல்லது மற்ற தேவைகளுக்காகத் துடிப்பார். தன் நிலை மறந்தவர் ஆகிறார். சிலவேளை மக்கள் இதே சிரமங்களில் சிக்கி, தற்கொலையும் செய்து கொள்கிறார்கள். ஆனால், இறைவன் புறமிருந்து அனுப்பப்படும் நபரின் இதே எழுச்சி இறைவனுடைய ஏகத்துவத்துக்காக ஆகி விடுகிறது. மேலும், தமது மனயிச்சைகளுக்குப் பதிலாக, இறைவனின் ஏகத்துவத்துக்காகத் துடிப்பவராகவும், தன்னை மறந்தவராகவும் இருக்கிறார்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: இத்தகைய நேரத்தில் اَنۡتَ مِنِّىۡ بِمَنۡزِلَةِ تَوۡحِيۡدِىۡ وَ تَفۡرِيۡدِىۡ எனும் இந்தச் சொற்கள் இறைவன் புறமிருந்து வருகின்றன என்று நான் புரிகிறேன். ஏனெனில், அல்லாஹ்வுக்குத் தனது தவ்ஹீத் மிக மிகப் பிடித்தமானதாகும். இந்த ஏகத்துவத்துக்காகத்தான் அல்லாஹ் சிலவேளை தொற்றுநோயையும், சிலவேளை பஞ்சத்தையும், சிலவேளை தன்னுடைய அன்பிற்குரிய நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) உடைய கைகளில் உள்ள வாளால் அதை நிலைநாட்டுவதற்காக, ஆயிரக்கணக்கான இணைவைப்பாளர்களின் உயிர்களை அழித்து விட்டான். மக்கா மற்றும் மதீனா முனவ்வராவின் நிலைமைகளும் இதற்காகவே சிக்கலானதாக மாறியிருந்தன. மூஸா (அலை) அவர்களின் விவகாரமும் இந்தத் தவ்ஹீதுக்காகவே இருந்தது. (மல்ஃபூஸாத், தொகுதி 5, பக்கம் 1 -2, 2022-ம் ஆண்டு பதிப்பு)

இணைவைத்தல் மற்றும் அதன் நுணுக்கமான வகைகளைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒவ்வொரு வகையான ஷிர்க்கிலிருந்து தவிர்ந்திருக்கவும் வேண்டும். சூரியனையோ, சந்திரனையோ, விண்மீன்களையோ, காற்றையோ, நெருப்பையோ, தண்ணீரையோ, பூமியின் வேறு எந்தப் பொருளையோ இணையாக்கக்கூடாது. உலகக் காரணிகளுக்கு, அவை இறைவனுக்கு இணையானவை என்பது போன்று அத்தகைய கண்ணியமும் அளிக்கக்கூடாது. அந்த அளவுக்கு அவற்றை நம்பவும் கூடாது. தனது துணிச்சல் மற்றும் முயற்சியையும்கூட ஒரு பொருட்டாகக் கருதக் கூடாது. ஏனெனில், இதுவும் இணைவைப்பின் வகைகளில் ஒன்றாகும். மாறாக, அனைத்தையும் செய்து விட்டு நாம் ஒன்றுமே செய்யவில்லை என்று கருத வேண்டும். தனது அறிவின் மீதும் எந்த ஆணவமும் கொள்ளக்கூடாது; தனது செயலின் மீதும் எந்தப் பெருமிதமும் கொள்ளக்கூடாது. மாறாக, உண்மையில், தன்னை அறிவீனனாகக் கருத வேண்டும். சோம்பேறியாகக் கருத வேண்டும். ஆன்மா எந்நேரமும் இறைவனுக்கு முன்னால் விழுந்து கிடக்க வேண்டும். அனைத்தையும் செய்த பிறகும், அல்லாஹ்வே! உனது அருளாலேயே அனைத்தும் நடக்கும்; அனைத்து விளைவுகளும் வெளிப்படும் என்று அல்லாஹ்வுக்கு முன் குனிந்திடுங்கள். மனிதனின் அறிவு ஒரு கற்பிப்பவரின் தேவையுடையதாகவும், அளவிற்குட்பட்டதாகவும் இருக்கிறது. மனிதனின் அறிவு படித்துக் கொடுப்பவர் ஒருவரின் தேவையுடையதாக இருக்கிறது. ஆனாலும், வரையறைக்குட்பட்டதாக, அளவிக்குட்பட்டதாக இருக்கிறது. ஆனால், அவனது அறிவோ எந்தக் கற்பிப்பவரின் தேவையும் அற்றது. அதாவது, அல்லாஹ்வின் அறிவு கற்பிப்பவர் எவரின் தேவையும் அற்றது; வரையறையும் அற்றது. அதற்கு எந்த எல்லையும் இல்லை. மனிதனுடைய செவித்திறன், காற்றின் தேவையுடையதாகவும், வரையறைக்குட்பட்டதாகவும் இருக்கிறது. மனிதனின் கேட்கும் திறனுக்குக் காற்று தேவை. பிறகும், அவனால் குறிப்பிட்ட வரையறைக்குள்ளேயே கேட்க முடியும். ஆனால் இறைவனின் கேட்கும் திறன் சொந்த ஆற்றலினாலும் இருக்கிறது; வரையறைக்குட்பட்டதுமல்ல. மனிதனின் பார்வை சூரியன் அல்லது வேறு ஏதேனும் ஒளியின் தேவையுடையதாக இருக்கிறது; வரையறைக்குட்பட்டதும் ஆகும். ஆனால், இறைவனின் பார்க்கும் திறன் சொந்த ஒளியினாலும் உள்ளது; வரையறையற்றதாகவும் இருக்கிறது.

இவ்வாறே மனிதனின் படைப்பாற்றல் ஏதேனும் மூலப்பொருளின் தேவையுடையதாக இருக்கிறது; நேரமும் தேவைப்படுகிறது; மேலும், வரையறைக்குட்பட்டதாகவும் இருக்கிறது. ஆனால், இறைவனின் படைப்பாற்றலுக்கு எந்தப் முலப்பொருளும் தேவையில்லை; எந்த நேரமும் தேவையில்லை; மேலும், எல்லையற்றதாகும். ஏனெனில், அவனுடைய அனைத்துப் பண்புகளும் இணையற்றவையும் நிகரற்றவையுமாகும். அவனுக்கு இணை ஏதும் இல்லாதது போன்று, அவனுடைய பண்புகளுக்கும் இணை ஏதும் இல்லை. அவன் ஒரு பண்பில் குறையுடையவனாக இருந்தால் பிறகு, அனைத்துப் பண்புகளிலும் குறையுடையவனாக இருப்பான். எனவே, அவன் தனது இருப்பைப் போன்று, தனது அனைத்துப் பண்புகளிலும் நிகரற்றவனாகவும், ஈடற்றவனாகவும் இல்லாத வரை அவனது ஏகத்துவம் நிலைபெற முடியாது. திருக்குர்ஆன் கற்றுக் கொடுத்த தவ்ஹீத் இதுவாகும். இது ஈமானின் அடிப்படையாகும். (லெக்சர் ஸியால் கோட், ரூஹானீ கஸாயீன், தொகுதி 20, பக்கம் 154 - 155)

இன்றைய காலத்தின் தாக்கத்தின் கீழ், சிலவேளை பிள்ளைகளிடமும், அல்லாஹ்வைப் படைத்தது யார்? அல்லாஹ் எங்கிருந்து வந்தான்? என்ற கேள்விகள் எழுகின்றன; மேலும் எழுதிக் கொண்டிருக்கின்றனர். பெரியவர்கள் அவர்களுக்குக் கூறுவார்கள் போல. அல்லது சுயமே அவர்களுடைய சிந்தனையில் இந்தக் கேள்விகள் எழுகின்றன. ஆனால், அல்லாஹ்வின் பண்புகள் எத்தகையவை எனில், அல்லாஹ் தொடக்கமும் முடிவும் இல்லாத எனறென்றும் இருப்பவன் ஆவான். அவன் எல்லையற்றவன். எனவே, அவனே அனைத்தையும் படைத்தான். அவனை எவரும் படைக்கவில்லை. **தானாகவே உருவானது என்று இறுதியான எந்தப் பொருளைப் பற்றி ஒரு கற்பனை உருவாக முடியுமோ அது இறைவனே ஆவான்!**

நினைவில் கொள்ளுங்கள்! இறைவனை அவனது இருப்பில் இணையாக்கப்படுகின்ற அனைத்திலிருந்தும், அது சிலையானாலும், மனிதனானாலும், சூரியனானாலும், சந்திரனானாலும் அல்லது தனது ஆன்மா, தனது திட்டம், சூழ்ச்சியும், வஞ்சகமும் ஆனாலும் சரி, ஆகிய அனைத்தையும் விட்டும் தூயவனாகக் கருதுவது மற்றும் அவனுக்கு நிகராக வேறெவரையும் வல்லமையுள்ளவராகக் கருதாமல் இருப்பது, வாழ்வாதாரத்தை வழங்குபவராக ஏற்காமல் இருப்பது, கண்ணியம் வழங்குபவராகவும், தாழ்த்துபவராகவும் கருதாமல் இருப்பது, மதிப்பளிப்பவராகவும்,

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

இழிவடையச் செய்பவராகவும் கருதாமல் இருப்பது மற்றும் எவரையும் உதவி, ஒத்தாசை செய்பவராகவும் ஏற்காமலிருப்பது ஆகிய இந்த உண்மையான ஏகத்துவத்தைத்தான் நாம் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று இறைவன் நம்மிடம் நாடுகின்றான். இதனை ஏற்பதில்தான் ஈடேற்றம் உள்ளது. அடுத்தது, அவனிடமே நாம் நேசம் கொள்ள வேண்டும். அவனை மட்டுமே வணங்க வேண்டும். அவனிடம் மட்டுமே மன்றாட வேண்டும். அவனிடம் மட்டுமே எதிர்ப்பார்ப்பை வைக்க வேண்டும். அவனுக்கு மட்டுமே அஞ்ச வேண்டும் என்பதாகும்.

ஆக, இம்மூன்று வகையான (இறைவனுக்கே) உரித்தாக்குதல் இன்றி எந்த ஏகத்துவமும் முழுமையடைய முடியாது. முதலாவது இருப்பின் அடிப்படையில் ஏகத்துவம். அதாவது, அவனுக்கு நிகராக, (உலகில்) இருக்கின்ற மற்றனைத்தையும் இல்லாதவையாக, அதாவது, அழியக்கூடியவையாகக் கருதுவது. அனைத்தையும் அழிவிற்குரியவையாகவும், உண்மையற்றவையாகவும் கருதுவது. அனைத்தும் தம்மளவில் அழியக்கூடியவையாகும்; பொய்யானவையாகும். முழுமையான நிறைவுத்தன்மை பெற்றவையல்ல. இரண்டாவது, பண்புகளின் அடிப்படையில் ஏகத்துவம். அதாவது படைத்துப் பரிபாலித்தல் மற்றும் வணக்கத்திற்குரியவன் ஆகிய பண்புகளை இறைவனையன்றி வேறெவரிடமும் இருப்பதாகக் கருதாமலிருப்பது. புறத்தோற்றத்தில், பல கடவுள்களாகவோ அல்லது அருள் வழங்குபவர்களாகவோ தெரிகின்றவர்களை, எவர்களிடமிருந்து மனிதன் பலன் பெறுகின்றானோ, அவன் அவர்களையும் ரப்பாகக் கருதுகிறான். ஆனால், அவர்களை (இறைவனான) அவனால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு என உறுதியாக நம்புவது ஆகும். எந்த அமெரிக்காவும் கிடையாது. எந்த இஸ்ரேலும் கிடையாது. உலகின் வேறு எந்த வல்லரசும் கிடையாது. மாறாக, இறைவனின் வல்லமை மட்டுமே இருக்கிறது. முஸ்லிம்களும் இதை அடையாளம் கண்டு கொண்டால், நிச்சயம் அவர்கள் வெற்றி பெறுவார்கள்.

மூன்றாவது, தனது நேசம், உண்மை மற்றும் உளத்தூய்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஏகத்துவம். அதாவது, அன்பு போன்ற வணக்கத்தின் அடையாளங்களில் மற்றெவரையும் இறைவனுக்கு இணையாக்காமலிருத்தல் மற்றும் அவனுள்ளேயே தன்னை மாய்த்துக் கொள்ளுதல் ஆகியவையாகும்,. (ஸிராஜுத்தீன் ஈஸாயி கே சார் ஸவாலோன் கா ஜவாப், ரூஹானீ கஸாயீன், தொகுதி 12, பக்கம் 349 - 350)

அல்லாஹ்விடம் இருக்க வேண்டிய அன்பைப் போன்று வேறு எவரிடமும் அத்தகைய அன்பு கொள்ளுதல் கூடாது.

அடுத்து, அன்னார் (அலை) கூறுகிறார்கள்: இப்பொழுது இந்தக் காலத்தில் பூமி சீர்கெட்டுவிட்டதையும், கோடிக்கணக்கான படைப்பினங்கள் இணைவைப்பின் வழிகளை மேற்கொண்டு விட்டதையும், ஓர் எளிய மனிதரான மர்யமின் மகனை இறைவனாக ஆக்குகின்றவர்கள் 40 கோடிக்கும் மேலானவர்கள் உலகில் பிறந்து விட்டதையும் - அந்தக் காலத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 40 கோடியாக இருந்தது - அத்துடன் மது அருந்துதல், கட்டுபாடில்லா வாழ்வு, உலகியலுக்குப் பின்னால் செல்லுதல் மற்றும் கவனமின்மையான வாழ்வு உச்சத்தை அடைந்த விட்டதையும் இறைவன் பார்த்தபோது, இறைவன் என்னை, நான் அந்த சீர்கேடுகளை சீர்த்திருத்தும் பொருட்டு, இந்தப் பணிக்காக அனுப்பினான். எனவே, இதுவரை என் கையில் ஏறத்தாழ ஒரு லட்சம் மனிதர்கள் தீமையை விட்டும், தீய கொள்கையை விட்டும், தீய செயல்களையும் விட்டும் தவ்பா செய்து விட்டார்கள். இது அன்னார் கூறிய அந்தக் காலத்தின் விஷயமாகும். இப்பொழுதோ அல்லாஹ்வின் அருளால் கோடிக்கணக்கானவர்கள் அன்னாருடைய ஜமாஅத்தில் இணைந்து விட்டார்கள். அன்னார் அடையாளங்களைப் பற்றியும் கூறினார்கள். அதாவது, 150 க்கும் மேற்பட்ட அடையாளங்கள் வெளிப்பட்டு விட்டன. அதற்கு இந்த நாட்டில் பல லட்சம் பேர் சாட்சிகள் ஆவார்கள். பூமியில் மீண்டும் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காகவும், மனிதனை வணங்குதல் கல்லை வணங்குதல் ஆகியவற்றிலிருந்து மக்களை விடுவித்து ஒருவனும் இணையற்றவனுமான இறைவன் பக்கம் அவர்களைத் திருப்புவதற்காகவும், அகத்தூய்மை மற்றும் உண்மையின் பக்கம் அவர்களுக்கு கவனமூட்டுவதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன்.

ஆக, மக்களிடம் ஓர் உந்துதல் உருவாகி விட்டதை நான் காண்கின்றேன். ஆயிரக்கணக்கான மக்கள் எனது கையில் தவ்பா செய்து கொண்டே செல்கிறார்கள். விண்ணிலிருந்து காற்றும் எப்படி வீசுகிறது என்றால், இப்பொழுது இயல்புகள் தவ்ஹீதின் பக்கம் ஈர்க்கப்படுகின்றன. மனிதனை வணங்குதலை உலகிலிருந்து இல்லாமல் ஆக்குவதுதான் இப்பொழுது இறைவனின் எண்ணம் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த எண்ணத்தை முழுமைப்படுத்துவதற்காக ஆயிரக்கணக்கான காரணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. (மக்தூபாத்தே அஹ்மது, தொகுதி 1, பக்கம் 256 - 257, புதிய பதிப்பு)

அல்லாஹ் நமக்கும் அவற்றை வழங்கியுள்ளான். மேலும், அதன் மூலமாக நாம் தப்லீகும் செய்கிறோம். இது ஒவ்வோர் அஹ்மதியின் வேலையுமாகும். அதாவது, தவ்ஹீதைப் பரப்புவதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: சிலை வணக்கத்திற்கான இலக்கணம் என்ன என்றும், எது அந்த மக்களை சிலை வணங்கிகளாக ஆக்குகிறது என்றும் எம்மிடம் கேட்கப்படுகிறது. அதைப் பொறுத்தவரை நாம் அந்த விஷயங்களை எடுத்துக் கூறுவது கட்டாயமாகும். இறை வணக்கம் கொள்கைகளின் விளைவாகும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மேலும், இறைவன் ஒருவன் ஆவான்; மேன்மையும் மகத்துவமும் மிக்க அல்லாஹ்வின் பண்புகள் எப்பொழுதும் நிலைத்தும் நிரந்தரமாகவும் இருக்கின்றன என்பதுதான் உண்மையாளர்களின் கொள்கையாகும். அதாவது, அவனது பண்பில் மாற்றமும் மாறுதலும் இல்லை. எந்த மாற்றமும் ஏற்பட முடியாது. எந்த மாறுதலும் ஏற்பட முடியாது. முதலும் இல்லை; முடிவும் இல்லை. மெய்யான, உண்மையான இறைவன் தொடக்கமும் முடிவும் அற்றவன் ஆவான். பிறப்பதற்கு அவன் ஒன்றும் படைப்பினம் அல்ல. அதாவது, எவ்வகையிலும் பிறந்தவன் அல்ல. நான் முன்னரும் கூறியது போன்று, சிலருடைய கேள்விகளுக்கு இதில் பதில் வந்து விட்டது. மெய்யான, உண்மையான இறைவன் தொடக்கமும் முடிவும் அற்றவன் ஆவான். பிறப்பதற்கு அவன் ஒன்றும் படைப்பினம் அல்ல. அவன் பிறக்கவில்லை. எந்தப் பண்புகளை ஏற்றுக் கொள்வதை நமது உள்ளம் வெறுக்குமோ அத்தகைய பண்புகளுக்கு அப்பாற்பட்டவன். அவனுடைய பண்புகளோ நமது உள்ளம் ஒப்புக் கொள்ளக்கூடியவையாகும். மேலும், நமது உள்ளம் அவனுடைய பண்புகளால் அன்பில் திளைத்துள்ளது. அவன் தொடக்கமற்ற நிலையிலிருந்தே ஒருவனாவான். அவனது ஏகத்துவத்தை மறுக்கும் எந்த உள்ளம்தான் உள்ளது. முடிவற்ற காலம் வரை அவன் ஒருவன் ஆவான். எந்த உள்ளம்தான் அவனது திரித்துவத்தை ஒப்புக் கொள்கிறது?
(மக்தூபாத் அஹ்மது, தொகுதி 5, பக்கம் 489 - 490)
இதுதான் கிறிஸ்துவ போதனையே அன்றி, மூன்று கடவுள்கள் இருக்கிறார்கள் என்பதல்ல.

இறைவன் மூவர் ஆவர் என்பது கிறிஸ்த்துவ மார்க்கத்தின் போதனையல்லவா? ஆனால், நல்லியல்புள்ள எவரும் முத்தெய்வக் கொள்கையை ஒப்புக் கொள்ள முடியாது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: நான் முக்கடவுள் கொள்கை எனும் சீர்கேட்டை சீர்திருத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளேன். கிறிஸ்தவத்தில் எந்த சீர்கேடுகள் உருவாகி விட்டனவோ அவற்றை சீர்திருத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளேன்.

எனவே, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவனாகக் கருதிக் கொண்டிருக்கின்ற இத்தகைய மக்கள் உலகில் 40 கோடிக்கும் சற்று அதிகமானவர்கள் காணப்படுகிறார்கள் என்ற இந்த வேதனை தரும் காட்சி, எனது உள்ளத்தில் எந்த அளவுக்குப் பெருந்துயரத்தை ஏற்படுத்தி வந்துள்ளது என்றால், என் மீது எனது முழு வாழ்நாளிலும் இதை விட அதிகம் பெரிய துயரம் ஏதும் வந்ததாக நான் எண்ண முடியவில்லை. மாறாக, வேதனையாலும், துயரத்தாலும் மரணிப்பது எனக்கு சாத்தியப்பட்டிருந்தால், ஏன் இந்த மக்கள் ஒருவனும் இணையற்றவனுமாகிய இறைவனை விட்டுவிட்டு ஓர் எளிய மனிதனை வணங்குகிறார்கள்? ஏன் உண்மையான நேர்வழி மற்றும் நேரான பாதையுடன் உலகிற்கு வந்த அந்த நபியின் மீது, அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இந்த மக்கள் ஈமான் கொள்வதில்லை? என்ற இந்த வேதனை என்னை அழித்திருக்கும். இந்த வேதனையின் பெருந்துயரத்தால் நான் மரணித்து விடுவேனோ என்ற அச்சம் எனக்கு எப்பொழுதும் இருந்து வந்துள்ளது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்: ஓர் எளிய மனிதர் இறைவன் ஆக்கப்படுகிறார் என்ற இந்த இட்டுக்கட்டுதலால் வானம் பிளந்து விடவிருக்கிறது என்று இறைவன் திருக்குர்ஆனில் உண்மையைக் கூறியுள்ளான். இந்த வேதனையால் என் நிலை எப்படி ஆகிறது என்றால், இந்த வேதனையால் என் நிலை எப்படி இருக்கிறது என்றால், மற்ற மக்கள் சொர்க்கத்தை வேண்டுகிறார்கள் எனில், நான் என வாழ்நாளில் இந்த இணைவைப்பிலிருந்து மனிதர்கள் விடுபடுவதையும், இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதையும் பார்ப்பதுதான் எனக்கு சொர்க்கம் ஆகும்.

எனது ஆன்மா எந்நேரமும், இறைவா! நான் உன் புறமிருந்து இருக்கிறேன் என்றால், உனது அருளின் நிழல் என்னுடன் இருக்கிறது என்றால், நவூதுபில்லாஹ்! ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்கள் இறைவன் என வாதம் புரிந்தார்கள் என்ற இந்தப் பழி அவர்களின் தலையிலிருந்து அகற்றப்படும் அந்த நாளை எனக்குக் காட்டுவாயாக! இறைவன் அந்த மக்களுக்குக் கண்களை அருள்வானாக! அவர்கள் அவனது ஓரிறைமையின் மீது ஈமான் கொள்ளட்டுமாக! அவனது தூதரை அடையாளம் கண்டு கொள்ளட்டுமாக! அவர்கள் முத்தெய்வக் கொள்கையை விட்டும் தவ்பா செய்வார்களாக! என்ற இந்தத் துஆக்களையே நான் ஐவேளையும் செய்து வந்த ஒரு நீண்ட காலம் கழிந்து விட்டது.
(மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 2, பக்கம் 547 - 548, 2018-ம் ஆண்டு பதிப்பு)

செயல்ரீதியாகவோ கிறிஸ்துவம் அழிந்து வருகிறது. முக்கடவுள் கண்ணோட்டமோ வெறும் நூல்களில் உள்ள கண்ணோட்டமாக ஆகி விட்டது. அவற்றை செயல்படுத்துபவர்கள் மிகக் குறைந்தவர்களே. குறிப்பாக, ஐரோப்பாவில். ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் இப்பொழுதும் இருக்கிறார்கள். ஆனால், எவர்கள் முக்கடவுள் கொள்கையை விடவும் செய்கிறார்களோ, அவர்களும் ஓரிறைவனை ஏற்பதில்லை. எனவே, தவ்ஹீதில் நிலைபெறச் செய்வதற்கு நாம் இந்தத் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு நம்மால் இயன்ற அளவுக்கு முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ் எந்த நோக்கத்தை முழுமைப்படுத்துவதற்காக அன்னாரை அனுப்பினானோ எந்தத் தவ்ஹீதின் போதனையை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அறிவித்தார்களோ அந்த உண்மையான ஏகத்துவத்தின் மீது நாம் அமல் செய்பவர்களாகவும் இருப்போமாக! உலகில் பரப்பக்கூடியவர்களாகவும் இருப்போமாக! அதற்கு அல்லாஹ் அருள்புரிவானாக! ஏனெனில், இப்பொழுது மனிதம் எஞ்சியிருப்பதற்கு இது ஒன்றே தீர்வாகும். இதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

தொழுகைக்குப் பிறகு, நான் இருவருடைய ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். முதலாவதாக, மதிப்பிற்குரிய ஃஹாஜா ஸஃபர் அஹ்மத் சாஹிப் ஆவார்கள். இவர்கள் ஸியால்கோட் மாவட்டத்தின் முன்னாள் அமீராக இருந்தார்கள். தற்போது, சில காலங்களாக அமெரிக்காவில் வாழ்ந்து வந்தார்கள். கடந்த நாட்களில் தமது 91 ஆவது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். **இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.**

மர்ஹூம் மூஸி ஆவார்கள். இவர்களின் மகள் இஃபத் ஹைய் கூறுகிறார்: சிறுவயது முதலே, அவர்கள் தம் வாழ்வை ஜமாஅத்தின் தொண்டில் கலப்பற்ற பணிவுடனும், முழுமையான அர்ப்பணிப்புடனும் கழிப்பதை நாங்கள் பார்த்துள்ளோம். கிலாஃபத் மீது அவர்கள் கொண்டிருந்த ஆழ்ந்த பிணைப்பு, அவர்களது இயல்பின் தெளிவாகத் தெரியும் பண்பாகும். இதுவே அவர்களின் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரின் உள்ளங்களிலும் கிலாஃபத்தின் மீதான அன்பையும் நன்றியுணர்வையும் உருவாக்குவதில் அடிப்படைப் பங்காற்றியது. இது உண்மையுமாகும். மிகுந்த நன்றியுணர்வுள்ளவராக, கலப்பற்ற தன்மை கொண்டவராக மற்றும் ஜமாஅத் அமைப்பின் மீது ஆழ்ந்த பற்று கொண்டவராக இருந்தார். இவர்களுக்கு இளமைப் பருவம் முதல் வயதின் இறுதி வரை தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. குத்தாமுல் அஹ்மதிய்யாவில் உள்ளூர் காயித் ஆகவும், மாவட்டக் காயித் ஆகவும், உள்ளூர் அமீராகவும், மாவட்ட அமீராகவும் இவர்களுக்கு வாய்ப்பு கிடைத்து வந்தது. இவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவதில் பெரும் ஆர்வம் இருந்தது. தலைமையகத்திலிருந்து செல்லும் பயணக்குழுவினரைத் தம் வீட்டில் தங்க வைத்து, அவர்களுக்குத் தொண்டாற்றுவார்கள். மிகவும் மகிழ்ந்த முகமாக, அவர்களுக்கு விருந்தோம்பல் செய்வார்கள். இந்தத் தொண்டுகளை செய்யும் போது, அவர்களுடைய முகத்தில் ஒரு சிறப்பான மன அமைதி தென்படும். இவர்கள் எந்தப் பொறுப்பாளர் குறித்தும் பொருத்தமற்ற எந்தக் கூற்றையும் ஒருபோதும் கூறியதுமில்லை. ஒருபோதும் கேட்கவும் விரும்பியதுமில்லை. இவர்கள் ஒருபோதும் தம்முன் யாரையும் விமர்சிக்க அனுமதித்ததில்லை. இவர்களுக்கு அல்லாஹ்வின் மீது முழுமையான தவக்குல் (நம்பிக்கை) இருந்தது. ஜமாஅத் பணியிலோ அல்லது தனிப்பட்ட வாழ்விலோ எப்பொழுதாவது ஏதாவது சோதனை ஏற்பட்டாலும், இவர்கள் கவனம் எப்பொழுதும் துஆவின் பக்கமே இருக்கும்; அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்திருப்பார்கள்.

இவர்களின் மகள் கூறுகிறார்கள்: அல்லாஹ் அவர்களுக்குப் பலமுறை முழுமையாக உதவி செய்ததையும், அவர்களுடைய துஆக்களை ஏற்றுக்கொண்டதையும் நாங்களும் பார்த்திருக்கிறோம். இவர்களின் தாயார் நோய்வாய்ப்பட்டிருக்கிறார், அவர்களுக்கும் இவர்கள் பெரும் தொண்டாற்றியிருக்கிறார்கள். மிகவும் பொறுமையுடனும் அன்புடனும் பல ஆண்டுகள் வரை அவர்களுக்குத் தொண்டாற்றி வந்தார்கள். இவர்கள் பின்விட்டுச்

சென்றவர்களில், மனைவி மட்டுமின்றி, மூன்று மகள்கள், மகள் வழிபேரப்பிள்ளைகள் மற்றும் கொள்ளுப் பேரப்பிள்ளைகளும் இருக்கிறார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்குவானாக! அவ்வாறே, நிர்வாக ரீதியாகவும் மாவட்ட அமீராக இருந்தார்கள். எனவே, ஒவ்வொரு ஜமாஅத்தைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தார்கள். கிராமங்களில் இருந்த மிகச்சிறிய ஜமாஅத்துகள் குறித்தும் அறிந்திருந்தார்கள். அப்பொழுது அங்கு செல்லும் எல்லாப் பாதைகள் குறித்தும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. மாவட்டத்தின் நிலவரங்கள் மீது அவர்கள் மிக ஆழமான பார்வையை வைத்திருந்தார்கள். இவர்கள் அமீராக இருக்கிறார்கள் என்பதனால், நகரத்தில் மட்டும் உட்கார்ந்திருக்காமல், ஒவ்வொரு இடத்திற்கும் சென்று வருவார்கள். அங்கு நிலைமைகள் சீராக இருந்த காலத்தில், ஜல்ஸா சாலானாவில், ஸியால்கோட்டி◌ருந்து மாநாட்டில் கலந்துகொள்பவர்களுக்காகச் சிறப்பு ரயில்கள் வரும்; அப்பொழுது இவர்கள் மிகுந்த கட்டுக்கோப்பான, ஒழுங்குப்படுத்தப்பட்ட ஏற்பாட்டைச் செய்வார்கள். இவர்கள் மிகுந்த அன்பு காட்டக்கூடிய நபராக இருந்தார்கள். நான் குறிப்பிட்டது போல, எப்போதும் கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வினால் நிறைந்து காணப்பட்டார். மிகவும் எளிய மனிதராக இருந்தார். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்குவானாக!

இரண்டாவது குறிப்பு, மதிப்பிற்குரிய இத்ராகோ அலீது சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் புர்கினாஃபாஸோவின் உள்ளூர் அஹ்மதி ஆவார்கள். ராணுவத்தில் பணியாற்றி வந்தார்கள். தற்போது ஆயோக்யா எனும் கிராமத்தில் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார்கள். அங்கு பயங்கரவாதிகள் பெரும் கலவரத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். இந்நிலையில், மார்ச் 3 ஆம் தேதி பணியில் இருந்தபோது, பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில், இவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். ஷஹீது ஆகி விட்டார்கள். **இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.**

இவர்களுக்கு 40 வயது இருந்தது. ஒரு கலப்பற்ற காதிமாக இருந்தார்கள். 2007 இல் இவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றார்கள். இவர்களும் இவர்களின் துணைவியாரும் தம் குடும்பத்தில் தனி அஹ்மதிகள் ஆவார்கள். இவர்கள் குடும்பத்தில் வேறு யாரும் அஹ்மதி இல்லை.

மண்டல முபல்லிஃக் சஆதத் சாஹிப் கூறுகிறார்கள்: மர்ஹூம் ஜமாஅத்தின் பெரும் சுறுசுறுப்பான உறுப்பினராக இருந்தார்கள். ஜமாஅத்தோடும், கிலாஃபத்தோடும் ஆழமான தொடர்பு இருந்தது. மிகவும் நற்பண்புள்ளவர், இபாதத் செய்பவர், கலப்பற்ற அஹ்மதி இளைஞராக இருந்தார்கள். மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆகவும் இருந்துள்ளார்கள். முறையாக சந்தா செலுத்துபவராக இருந்தார்கள். ஜமாஅத் நிகழ்ச்சிகளில் முன்வந்து பங்கெடுப்பார்கள். ராணுவத்தில் பணியில் இருந்தும் கூட, புர்கினாஃபாஸோவின் ஆண்டுமாநாட்டில் ஒவ்வோர் ஆண்டும் கலந்து கொள்வார்கள். முபல்லிஃக்மார்கள் மற்றும் முஅல்லிம்மார்களுடன் மிகவும் கண்ணியமாகவும், மரியாதையாவும் நடந்து கொள்வார்கள். அவர்களுக்கு உதவியும் செய்து வந்தார்கள். 2008 இல் நான் கானாவுக்குச் சுற்றுப் பயணம் சென்றபோது, 2005 இல் புர்கினாஃபாஸோவும் சென்றிருந்தேன். ஆனால், 2008 இல் கானாவுக்குச் சென்ற போது, அங்கு புர்கினாஃபாஸோவின் காதிம்களின் ஒரு குழு மிதிவண்டிகளில் வந்திருந்தது. 1000 கி.மீ.க்கு மேல் பயணம் செய்து வந்திருந்தார்கள். அவர்களுடைய மிதிவண்டிகளும் இங்கிருக்கின்ற நம்முடைய மிதிவண்டிகள் போன்று இருக்காது. உடைந்து போன சைக்கிள்கள், உடைந்த ரோடுகள். அதில் இவர்கள் 1000 கி.மீ.க்கு மேல் பயணம் செய்துள்ளார்கள். இவர்கள் கானாவைச் சென்றடைந்தார்கள். அங்கு என்னைச் சந்தித்தார்கள். ஆண்டுமாநாடுகளுக்கு எப்பொழுதும் சைக்கிள்களில் சென்று வந்தார்கள்.

> திருக்குர்ஆனிலிருந்து...
>
> அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன (13:29)
>
> A. Khaleel Ahmad
> ( Melapalayam)

உள்ளூர் மிஷனரீ சம்பூரீ அப்துர் ரஹ்மான் ஸாஹிப் கூறுகிறார்கள்: இவர்களை ஜமாஅத்துக்குத் தன்னலமின்றித் தொண்டாற்றுபவராகவும், எந்நேரமும் தொண்டுக்காக ஆயத்தமாக இருப்பவராகவும் காணப் பெற்றேன். ஏதாவது ஒரு வேலைக்காக அழைக்கப்பட்டால், உடனடியாக லெப்பைக் கூறுவார்கள். ஆண்டுமாநாடு மற்றும் பிற கிளையமைப்பு இஜ்திமாக்களில் முழு பொறுப்புடன் பணியாற்றுவார்கள். மக்கள் இவர்களின் பணியின் காரணமாக, அதாவது, எவ்வளவு அர்ப்பணிப்புடன் செயல்பட்டார்கள் என்றால், இவர்களின் பணியின் காரணமாக இவர்களை சிறிய முஅல்லிம் என்று கூறி வந்தார்கள். அவ்வளவு ஏன், முஅல்லிம் கூட இவர்கள் செய்த அளவுக்கு வக்ஃபின் ஆன்மாவோடு பணியாற்றவில்லை என்றே சொல்ல வேண்டும்.

இவர்களுக்கு இவர்களுடைய ராணுவத்திலும் வேலை கிடைக்காத போது, எனக்கு இப்பொழுது எந்த வேலையும் இல்லை; நான் ஏழை ஆவேன். ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் எப்படி பங்கெடுப்பேன் என்று பெரும் கவலையுடன் இருந்து வந்தார்கள். எவ்வாறாயினும், இவர்களுக்கு வேலை கிடைத்ததும், இவர்கள் முறையாக சந்தா செலுத்தத் துவங்கினார்கள். ஜமாஅத்துடன் மிகவும் ஆழ்ந்த தொடர்பு இருந்தது. இவர்கள் எங்கு பணிமாற்றம் செய்யப்பட்டாலும், அங்கு சென்று முதலில் ஜமாஅத் மையம் அல்லது பள்ளிவாசலைத் தேடுவார்கள். மேலும், ஜூமுஆ தொழுகைகள் போன்றவற்றில் முறையாக வந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில், தாயார் மற்றும் துணைவியார் மட்டுமின்றி, ஒரு மகன் மற்றும் இரண்டு மகள்கள் இருக்கிறார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக!

தமிழாக்கம்

முரப்பி அதாவுல் முஃக்னீ

* * * * * * * * * * *

## ஹஜ்ஜத்துல் விதாவின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு

மக்களே! காது கொடுத்து கேளுங்கள்! இப்போது பேசுவது போன்று இந்த வருடத்திற்கு பிறகு இந்தத் திடலில் இனி ஒரு முறை நான் பேசுவேனா என்பது எனக்குத் தெரியாது. உங்கள் உயிர்களும், உங்கள் உடமைகளும், இறுதி நாள் வரை ஒருவருக்கொருவர் தாக்கி கொள்வதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று இறைவன் கட்டளையிட்டுள்ளான். பரம்பரை சொத்தில் ஒவ்வொருவருக்கும் உரிய பங்கை இறைவன் விதித்துள்ளான். ஒரு வாரிசின் பங்கை பாதிக்கும் எந்த மரண சாசனமும் கூடாது……

மக்களே! உங்கள் மனைவிகள் மீது உங்களுக்கு சில உரிமைகள் இருப்பது போன்று உங்கள் மீதும் உங்கள் மனைவிகளுக்கு சில உரிமைகள் இருக்கின்றன. அவர்கள் மீது உங்களுக்குள்ள உரிமையாவது அவர்கள் உங்களுடன் கற்புள்ளவர்களாக வாழ்ந்து வர வேண்டும். மேலும் அவர்கள் தங்கள் கணவர்களிடம் சமுதாயத்தில் அவமரியாதை ஏற்படும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது. அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டால் முறைப்படி பரிசீலனை செய்து நடுவர்களின் தீர்ப்பிற்கு பிறகு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுவது போன்று நீங்கள் அவர்களுக்கு தண்டனை வழங்கலாம். ஆனால் அது கடினமான தண்டனையாக இருக்கக் கூடாது. மக்களே! நான் கூறுபவற்றையெல்லாம் மிகவும் கவனமாக கேட்டு நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! முஸ்லிம்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் சகோதரராவார். நீங்கள் யாவரும் சம நிலையில் உள்ளவர்கள்; உங்களுள் எவர் எந்த சமுதாயத்தை சார்ந்தவராக இருந்தாலும், எந்தத் தகுதியை பெற்றவராக இருந்தாலும் மனிதன் என்ற வகையில் நீங்கள் யாவரும் சமமானவர்களாகவீர்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், பக்கம் 229- 231)

* * * * * * * * * * *

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 28 MAY 2026 Issue No. 22

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**1 - ம் பக்கத் தொடர்ச்சி**
**(தஃப்ஸீரே கபீர்).......**

வழங்கியுள்ளான்: அதாவது, குர்பானிகளில் அவற்றின் இறைச்சியோ அல்லது இரத்தமோ அல்லாஹ்வைச் சென்றடைகின்றது என்ற ஞானம் இல்லை. மாறாக, இதில் உள்ள நுட்பமான ஞானம் என்னவென்றால், அவற்றின் காரணமாக மனித உள்ளத்தில் தக்வா உருவாகின்றது; மேலும் அந்த இறையச்சம் அல்லாஹ்விற்கு விருப்பமானதாகும்.

எனவே, ஆடு, ஒட்டகம் அல்லது மாடு போன்றவற்றை குர்பானி கொடுத்துவிட்டு, தாங்கள் அல்லாஹ்வைப் பெற்றுவிட்டதாக கருதுகின்ற அந்த மக்கள் தவறிழைக்கின்றார்கள். அல்லாஹ் தெளிவாகக் கூறுகிறான்: ‘இது ஒன்றுமே இல்லை; மாறாக நீங்களே விலங்குகளை அறுத்து, நீங்களே சமைத்து உண்பது ஒன்றுமே இல்லை.‘ இதனால் அல்லாஹ்விற்கு என்ன? இதுவோ ஒரு குறியீட்டு மொழியில் ஓர் உண்மைத்துவத்தின் வெளிப்பாடாகும். இதற்குப் பின்னால் ஒரு பெரும் ஆழமான ஞானம் மறைந்துள்ளது. உதாரணமாக, ஓர் ஓவியர் எப்போதும் படங்களை வரைகின்றார்; ஆனால், வெறும் படத்தை உருவாக்குவது மட்டுமே அவரது நோக்கமாக இருப்பதில்லை. மாறாக அதன் மூலம் சமூகத்தின் முன்னால் சில முக்கியமான கருத்துக்களை வைப்பதாக இருக்கின்றது. எனவேதான் அவர் சில நேரங்களில் சங்கிலிகளை வரைகின்றார். அதன் பொருள் சமுதாய ஒற்றுமையாக இருக்கின்றது. சில நேரங்களில் சூரியன் உதிக்கின்ற காட்சியைக் காட்டுகின்றார். மேலும் அதன் பொருள் சமுதாய முன்னேற்றமாக இருக்கின்றது.

இதேபோன்று, இந்த வெளிப்படையான குர்பானியும் ஒரு சித்திர வடிவிலான மொழியாகும். விலங்குகளை அறுப்பவர், உண்மையில் தனது நஃப்ஸை தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார் என்பது இதன் பொருளாக இருக்கின்றது. எனவே குர்பானி கொடுப்பவர் ஒருவகையில் நான் அல்லாஹ்வின் வழியில் அனைத்தையும் தியாகம் செய்வேன் என்ற இந்த விஷயத்தை வெளிப்படுத்துகிறார்.

இதன் பிறகு, இரண்டாவது படி என்னவென்றால், மனிதன் சித்திர மொழியில் எதனை ஒப்புக் கொள்கிறானோ அதனை செயல் வடிவிலும் நிறைவேற்றிக் காட்ட வேண்டும். ஏனெனில், உண்மைத்துவம் இல்லாத வெறும் பின்பற்றுதல் என்பது எந்தவொரு கௌரவத்திற்கும் காரணமாக இருக்க முடியாது.

இதேபோல், ஆட்டை குர்பானி கொடுப்பதோடு சேர்த்து, தனது நஃப்ஸையும் தியாகம் செய்கின்ற நபர் கண்ணியமானவர்களின் பார்வையில் மரியாதைக்குரியவர் ஆவார். ஆனால், யார் வெறும் ஆட்டை மட்டும் குர்பானி கொடுத்துவிட்டு அதோடு திருப்தியடைகிறாரோ, அவர் வெறும் போலியானவர் மற்றும் வேஷக்காரர் ஆவார்; எனவே அவர் எந்தவொரு கௌரவத்திற்கும் தகுதியானவர் கிடையாது.

அடுத்து, ஆழமாக சிந்தித்துப் பார்த்தால், அன்றாடம் விலங்குகளை அறுக்கப் பழகிய கசாப்புக் கடைக்காரர்களைத் தவிர, மற்றவர்களின் இயல்பில் விலங்குகள் அறுபடுவதைப் பார்த்து, ஓர் ஆழமான தாக்கம் ஏற்படுகிறது; மேலும் அவர்களின் எண்ணங்களில் ஒரு மிகப்பெரிய எழுச்சி ஏற்படுகிறது என்பது தெரியவருகின்றது.

(தஃப்ஸீர் கபீர், தொகுதி 6, காதியான் பதிப்பு 2010, பக்கம் 57) ***** ******

**2 - ம் பக்கத் தொடர்ச்சி.........**
**(தலையங்கம்)**

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, ரூஹானி கஸாயின் தொகுதி 21, பக்கம் 424)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஈதுல் அழ்ஹா நாளன்று நஃபில் நோன்பு நோற்பதைக் குறித்து கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் உடல் ஆரோக்கியத்தின் நிலையில் குர்பானி கொடுத்து விட்டு உணவருந்துவார்கள் என்ற வழிமுறை நிரூபணமாகியுள்ளது. இருப்பினும், இதை எவரும் நோற்கவில்லை என்றால் அவர் பாவியாகி விடுவார் என்ற அளவிலான நோன்பு ஒன்றுமில்லை. இது ஒன்றும் ஃபர்ழ் அல்ல. மாறாக, இது ஒரு நஃபில் நோன்பு மற்றும் விரும்பத்தக்கது ஆகும். யார் நோற்க முடியுமோ அவர் நோற்கட்டும்! ஆனால் யார் நோயாளியாக, முதியவராக இருப்பாரோ அல்லது வேறு காரணங்களால் எவரால் நோற்க முடியவில்லையோ அவர் கடமைப்பட்டவரும் அல்ல; அவ்வாறு நோற்காததால் அவர் பாவியாகவும் ஆகிவிட மாட்டார்.

உடல் ஆரோக்கியமான நிலையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த நடைமுறையைப் பின்பற்றியதை நான் கண்டுள்ளேன்.‘

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 2, பக்கம் 263)

குர்பானி விலங்குகளுக்கான நிபந்தனைகள் யாதெனில், அது குறைகளற்றதாக இருக்க வேண்டும்; அதாவது நொண்டி, நோய்வாய்ப்பட்டது, காது அறுபட்டது அல்லது கொம்பு உடைந்ததாக இருக்கக் கூடாது. இது தவிர, அது ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும்.

குர்பானி கொடுப்பதற்கான நேரம் ஈத் தொழுகைக்குப் பிறகு தொடங்குகிறது. மேலும், மூன்று நாட்களுக்கு நீடிக்கிறது. குர்பானி இறைச்சியை தாமும் பயன்படுத்திக் கொள்ளலாம். உறவினர்கள் மற்றும் ஏழைகளுக்கும் வழங்க வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: குர்பானி இறைச்சி தொடர்பான கட்டளை என்னவென்றால், அது தருமம் அல்ல. தாமும் உண்ண வேண்டும்; நண்பர்களுக்கும், உறவனிர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

தமிழாக்கம்
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்
***** ******

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad